செய்கு தாவூது வலீ —
ஆண்டகை

# பிள்ளைத்தமிழ்

14678
(9209)
19638

ஆசிரியர் :
அதிராம் பட்டினம்
சொர்ணகவி
**நயினா முஹம்மது பாவாப் புலவர்**
அவர்கள்

பதிப்பாசிரியர் :
**ஹாஜி. கே. எஸ். சையிது முஹம்மது**
அண்ணாவியார் அவர்கள்

1990

செய்கு தாவூது வலீ ஆண்டகை

# பிள்ளைத் தமிழ்


ஆசிரியர் :

அதிராம்பட்டினம்

தலைமைப் புலமை

மகாவித்துவான்

ஜீவரத்ன கவிராஜர்-மருகரான

சொர்ண கவி

நயினா முஹம்மது பாவாப் புலவர்

அவர்கள்



பதிப்பாசிரியர் :

ஜனாப் ஹாஜி கே. எஸ். சையிது முஹம்மது

அண்ணாவியார்



வெளியீடு :

சிங்கைப் பதிப்பகம்

23, கரீம் சுபேதார் தெரு

(ஐஸ் அவ்ஸ்)

சென்னை-600 014

திருத்திய முதற்பதிப்பு அக்டோபர் 1990

விலை ரூ. 6-00

முத்துப் பேட்டை சாம்பவனோடை செய்கு தாவூது வலீ ஆண்டகை அவர்கள் பெயரில் பாடப்பெற்ற இந்நூல்,

நூலாசிரியர் சொர்ணகவி நயினா முஹம்மது பாவாப் புலவர் அவர்களின் மைத்துனர், நவரத்தினகவி காதிறு முகிய்யித்தீன் அண்ணாவியார் அவர்களின் குமாரர் ஹபீபு முஹம்மது அண்ணாவியார் ஹிஜ்ரி 1313 ஜமாதில் அவ்வல் (கி.பி. 1895 அக்டோபர்) மாதம் அச்சிட்ட படிக்கு இணங்க அச்சிடப் பெற்றது.

# பொருளடக்கம்

1. நூல் 5

2. பிள்ளைத் தமிழ் உறுப்புகளின் விளக்கக் குறிப்பு 56

3. அரபு - பாரசீகச் சொற்களின் பொருள் 62

4. அருஞ்சொற் பொருள் 62

அச்சிட்டோர் :

வெற்றி அச்சகம்

91, டாக்டர் பெசன்ட் சாலை,

இராயப்பேட்டை, சென்னை-14.

# முன்னுரை

(புலவர் அ. அஹ்மது பஷீர். எம். ஏ, எம். எட்)

அன்பின் தோற்றுவாயாக இறைவன் அமைத்தவை பல. அவற்றுள் ஒன்று குழந்தை. குழந்தையின் மீது அன்பு செலுத்தாதவரை வாழ்க்கை நிறைவைப் பெறுவதில்லை.

பெரியோரைக் குழந்தையாகப் பாவித்துப் பாடுவது தமிழ் மரபு. இஸ்லாமியப் புலவர்க்கும் இஃது ஏற்புடையதே. இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருவூலத்தில் பிள்ளைத் தமிழ் ஓர் அரிய செல்வம்.

அதிராம் பட்டினம் கல்வியிற் சிறந்தவர் பெருகி வாழ்ந்த வாழ்கிற ஓர் ஊர். அங்கு வாழும் அண்ணாவியார் குடும்பத்தினர் புலமைக் கலமேறிக் கலைக் கடல் கடந்து இலக்கிய உலகை வலம் வந்தவர்கள். அண்ணாவியார் குல முதல்வரான மதுரகவி சையிது முஹம்மது அண்ணாவியார் அவர்கள் "எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன விச்சை" என்னும் ஆன்றோர் மொழிக்கு இணங்கத் தம் பாரம்பரியத்திற்கே புலமைச் செல்வத்தைப் பரம்பரைச் சொத்தாக விட்டுச் சென்றனர். அப்பரம்பரையில் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த நயினா முஹம்மது பாவாப் புலவர் அவர்கள் அறிவும் ஒழுக்கமும் ஒருங்கே பெற்ற ஆன்மீகச் செல்வர். அவர்தம் புலமை அறிவு கொண்டு "அண்ணாவியார் பள்ளி"யின் அருங்கலை ஆழத்தை அறிய முடிகின்றது. சான்றோரை அடுத்துப் பணிந்து பாடி நின்றமை கொண்டு அவர்தம் பண்பட்ட வளர்ச்சியைத் தெரிய முடிகின்றது. மழை பெய்யாத பஞ்ச காலத்தில் மக்களும், மாக்களும் மரஞ்செடி கொடிகளும் வாடிய போது யாவரது துன்பத்தையும் நீக்க இறைவனை மழைவேண்டிப் பாடி, மழையைப் பெற்று மகிழ்வுறுத்

திபமை கொண்டு அவர்தம் தவநிலை ஆழத்தைத் தெளிய முடிகின்றது. ஆன்றோர்கள் மறைந்த பின்னரும் அவர்களுக்கு மரியாதை செய்த மாண்பின் காரணமாக அவர் மறைந்த பின்னரும் அவர்தம் மறைவிடத்தையும் மக்கள் மரியாதையோடு போற்றும் மாண்பு கண்டு, 'நன்மைக்குக் கூலி நன்மையே' என்பதை உணர முடிகின்றது.

சொர்ண கவி நயினா முஹம்மது பாவாப் புலவர் அவர்களின் மழைப் பாட்டும், முனாஜாத்துகளும் தனித்தனி நூல் வடிவம் பெற்றுள்ளன. தனிச் சிற்றிலக்கிய நூலாகிய இப் பிள்ளைத் தமிழ் இப்பொழுது வெளியீட்ப் பெறுகின்றது.

அண்ணாவியார் குலதிலகங்களின் அரிய நூல்கள் அனைத்தையும் பதிப்பிக்கும் பணியை ஜனாப் அல்ஹாற் கே. எஸ். சையிது முஹம்மது அண்ணாவியார் அவர்கள் ஆற்றிவருகிறார்கள். தம்முன்னோருக்குச் செய்யும் கைம்மாறாகவே இப்பெரும் பணியை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். முதுமைக்கும், பல்வேறு பொறுப்புகளுக்கும் இடையே இப் பணியைத் தொடர்ந்து செய்யும் அவர்களின் வயது தொன்னூறுக்கும் மேலாக இருக்கலாம். இருப்பினும் அவர்களது ஊக்க உணர்வு இருபது வயது இளைஞர்களுக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும். அவர்களின் இம்மை மறுமை நன்மைகளுக்கு வல்ல இறைவன் நல்லருள் புரிவானாக; ஆமீன்.

(ஒப்பம்) புலவர் அ. அஹ்மது பஷீர்

சென்னை 15-10-90

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருப்பெயரால்

ஷைய்கு தாவூது ஒலி ஆண்டகை அவர்கள் பெயரில்

# பிள்ளைத் தமிழ்

---

## காப்பு

### ஆசிரிய விருத்தம்

பொன்னிலமை வளர்சுவன நகர்அறுஷ்குறுஷி னொடு
பொறிநா (கு) அடுக்கெவைகளும்
பூச்சக்ர வாளகிரி சூழுலகம் ஏழுமலை
பொங்கி யெழு வாரிதிகளும்
மின்னுமதி கதிருடன் உடுக்கள் முகில் அந்தரமும்
விள்ளரிய பாதாளமும்
விண்ணவர்க ளும்ஜின் ம னுக்கள்முதலாகவே
விளங்கிய சராசரமெலாம்
உன்னியும் அமைத்ததற் கானபற் பலவிதம்
உவந்துதவி செய்தகனியாம்
ஒருபொருள் எனப்பலர் வணங்கிடுவதற் குரிய
ஓதவரி தானபரனே
கன்னல்செறி வெண்டரள மாநகர்வி ளங்கவே
களங்கற உதித்தமணியாய்க்
காவலர்கள் புகழ்செய்கு தாவுதொலி யையுனது
கருணைவைத் தருள்புரிவையே ! (1)

அந்தமும் முதலும் நடுவுந் தானதான தா
யாவினும் நிறப்பமுளதாய்
அகண்டமாய் நிர்மயசொ ரூபரூ பிகம்இலா
அசதிமற திகளும்இலதாய்த்
தொந்தமுற வெங்கணும் அடங்குதற் கரியதாய்த்
தொண்டர்கள் உவந்தபொருளாய்ச்
சொல்லுதற்(கு)உவமையிணை யேதெனினும் இல்லதாய்ச்
சுருதிமுடி வுற்றவருளாய்
தந்தைதாய் சுற்றமுதல் ஒன்றுமில் லாததாய்த்
தனியதாய் கின்றவடிவாய்ச்
சஞ்சலமும் மகிழ்வின்றி யேகபரி பூரண
தயாளநிறை கின்றவிறையே
கந்தமுறு வெண்டரள மா நகர்வி ளங்கவே
களங்கற வுதித்தமணியாம்
காவலர்கள் புகழ்செய்கு தாவுதொலி யையுனது
கருணைவைத் தருள்புரிவையே (2)

வேதநெறி கட்குரிய மாதவர் அகத்துள் ஒளிர்
மேரென வுதித்தமதியே
மேதினியி லுற்றஇரு ளானகுபிர் கெட்டலைய
வேரற வறுத்த கதிரே
நீதி நிலை யுற்றஹபீ போதமதி யைத்திருமுன்
நேருறவ ழைத்தும் இயல்பாம்
நேசமொ(டு) உரைத்துமறை யோதிடவே வெற்றிபெறு
நேமியர சுற்றவரசே
சூதர்கள் உரைத்தமச லாவினை இதத்தினொடு
சோர்வுற வுரைத்தபொருளே
சூழுலகில் நிற்கிறைவன் ஓதுமொழி யுற்றுரை செய்
தூதெனவு தித்தநபியே
ஆதனமி குத்தபொருள் மேவிவளர் முத்து நகர்
ஆதிபரெ னக்கருணைசேர்
ஆரணம்வி ளங்குசெய்கு தாவுதொலி யைத்தினமும்
ஆதரித் தருள்புரியவே ! (3)

கோவரசர் மாதவர்கிர் பாகரத போதனர்கள்
கோலுமண மேவுமலரே
கோதுபடர் பாலைநதி யேபெருக வேசெய்தெதிர்
கோளரியோ டோதும்அரியே
தேவுபரி யோடலகை நீதிநெறி மேவிவளர்
தீனிலுற வோதும்அறிவே
சேரலர்ப தாதிநிரை யோடழிய வோர்கைமணல்
தீரமொடு வீசும்அரசே
தூவல்செறி வானவர்கள் ஏவலுற வேநெடிய
தூயனறு சேறுமுதலே
தூலமிகு வாரணமி லேசுவன வீதிவழி
சூழுமகு மூதுநபியே
காவலர்கள் வாழ்தரள மாநகர மீதிலொரு
காவதென மேவுபுகழ்சேர்
காரணம தானசெய்கு தாவுதொலி யைநுமது
காவலுற ஆளும்நிதமே! (4)

வாசமிகு கத்தன்இற சூலுறுத லைக்கடையின்
வாயில்நிலை யுற்றமதியே
வானவர்ம யிர்ப்புடவை தானணைவ தற்கிசைவ
தாயுடையு டுத்தமணியே
வீசுகதி ருக்குளுயர் பேர்நிறுவி யெத்திசையும்
மேன்மைகள் தரித்தநிதியே
மேதினிது தித்திட ஈமானிலைமை பெற்றிலகு
வீரமது ரத்தவரியே
மாசுமறு வற்றுவளர் தீன்நபித மக்கினிய
மாதுலர் எனப்புகலவே,
மாமறைக ளுக்குரிய நீதியபு பக்கரெனும்
மாதவமி குத்தவடிவே
தேசுமிகு முத்துநகரானது செழிக்க வருள்
தேறுகலை கற்றபொருளாந்
தேசமகி ழுற்றசெய்கு தாவுதொலி யைத்தமது
சீர்பெறவு க்கநிதமே! (5)

கருமைதரும் இருளகல வருமிரவி பதியெவிழி
கடுமைபுரி திறமையுடையோய்
கவலையுடன் ஒருவனுதை பதறவழி யிடறியநெய்
கடிதின்வர வருளுமுறையோய்
எருதின்வடி வுறும்அமரர் உடனேசின மொடுகடவி
யிறைவன்நபி மரபில்வருவோய்
எதிருமடை யலர்களணி சிதறநடை கொடுமுடிகள்
இடறிவரு துரகதமுளோய்
உருமையுடன் நுழையருகு வெகுளியர வினிதினொடு
வொறுதுறையி லறலதுணவே
ஒருவனருள் பெருகிவளர் மறையின்வழி தலைமை செய்யும்
உமறுவென வருமரசரே
தருவின்மலர் சொரிநறவு நதிகள்மடை பெருகிநிறை
சகலவள முறுகழனிசூழ்
தரளநகர் வளரும்ஒலி யிவரெனவும் நிலமைசெறி
தயவுபெற வருள்புரியவே! (6)

தெரியவரி பவனொளிவின் உரியமணி யெனவும் உயர்
தெளிவுற உதிர்த்தும் இனிதாய்ச்
செப்பரிய தாகியச ராசரம் அடங்கலும்
திகழுறவி ளங்குமிறசூல்
உரியமக விருவரைத் திருமணமு டித்திலகு
வுயர்மருகர் எனவுதித்தே
உம்பருடன் மண்சுவனம் எங்கணுநி றைந்த பலர்
உயிர்விதிய னைத்தும் உறைவாம்
அரியலெள கினின்வரியின் முறையறிந் தினியமறை
யதன்முடிவு கண்டெழுதி நேர்
அருள்பெருகி வளரும் உதுமானென உவந்துலகர்
அகமகிழ நின்றபொருளே
கரியமுகி லுறுதுடவை யடர்தரள நகரிலொரு
கதிரென எழுந்தமதியாம்
காவலர்கள் புகழ்செய்கு தாவுதொலி யைத்தமது
கருணைவைத் தருள்புரியவே! (7)

வட்டவா ரிதிசுவற அட்டநா கம்பதற
வடவைகிடு கிடெனவசைய
வாசுகியின் முடிகள்நெறு நெறெனவேயுலகினோடு
வடவரைகு லுங்கியாட
தட்டுவிட் டண்டபகி ரண்டமுகடு அதிரவே
சத்தமே கங்கள் அலையத்
தாவிவரு வெங்கதிர வன் னிரத மாக்களுந்
தத்தளித்துத் திகைக்கக்
கொட்டமிடும் அடையலர்கள் அஞ்சித்தி டுக்கிடக்
கோடையை நடத்தியிருளாங்
குபிரறவ றுத்து நற்றீன்பயிர் விளைத்தே
குதாயறுசின் உற்றவலியே
மட்டுலவு சோலைசூழ் முத்துநக ருக்கினிய
மாதுல்ய மானமணிமா
மன்னர்புக ழுஞ்செய்கு தாவுதொலியைக் கருணை
வைத்தருள் புரிந்தாளவே! (8)

துங்கமுறு சொர்க்கநக ரிற்கனிப குந்துண்டு
தூயபொற் கலையணிந்து
துயில்புரிய வமரருக் கரசர்மணி யூசலைத்
தொட்டசைத் தருகிருக்க
எங்கள் மகு மூதுநபி பேரரென வும்மலிக்
கினியசந் ததிகளெனவும்
எதிருமடை யலர்மகுட முடியைத் தகர்த்திடறும்
ஏற்றிளஞ் சிங்கமெனவுஞ்
செங்கதிரோ டிந்துவென வெங்கும்பிர சங்கமாய்த்
தீனிலைத் தீபமெனவுந்
தீதறவி ளங்கிவளர் அசனுசைன் எனப்புகழ்ச்
செல்வரா திக்க முதலே
மங்குல்தவழ் சோலைசெறி முத்துநக ருக்கினிய
வடிவலங் காரமதியாய்
மாதவம் பெறுசெய்கு தாவுதொலி யைக்கருணை
வைத்துகந் தினிதாளவே! (9)

மருமலரி லங்கியுயர் செயிலானி யின்பதியின்
மகிமைபெற வந்துதித்து
வையகமெ லாம்புகழ நெறிநீதி தவறாத
வகுதாதி னுக்கரசராய்
உரியதாய் வயினிருந் தில்லமதி லுறுசோரன்
உயிரழிய வேபுடைத்து
ஓராயி ரம் ரிஷியு றுத்துண்ட சிறுவனையும்
உயிர்பெறவு மேயழைத்துத்
தெரியவரி தெனும் லௌகின் வரிமுறைமை பலவும்விழி
தெரியவிறை யவனருளினால்
தினம்வளர வளரப்துல் காதிருமு கிய்யிதீன்
என்னவொளி ருந்தீபமே
கருமையுறு துடவை செறி தரளதக ருக்கினிய
கதிரெனவு தித்ததிறலோர்
காசினியர் புகழ்செய்கு தாவுதொலி யைத்தமது
கருணைவைத் தருள்புரியவே! (10)

# செங்கீரைப் பருவம்

**(ஆசிரிய விருத்தம்)**

பொன்னுற்ற பற்பணிய தென்னவுல கெங்கும்
பொருந்தியும் பொருவிலாதாய்ப்
புகலுதற் கருவுருவ மிஃதெனவும் அறியொணாப்
புகழுரிய விறையருளினால்
அன்னையுளம் மகிழவே சென்னிக் கிசைந்தநெய்
யங்கையத னால்தடவியே
யருளடைகி டக்குமிரு விழிதனக் கஞ்சனம்
அன்புறவி ளங்கவெழுதிப்
பன்னுமா மறையறிவு ளத்தடநி ரம்பவே
பசிய முலை யமுதமூட்டிப்
பலகலன் அணிந்துகை சுமத்தியு மலங்கிர்தம்
பண்ணிவைத் திடவு மெழிலார்
சென்னத்தெ னும்பதிது லங்கும்ப சும்பிள்ளை
செங்கீரை யாடியருளே
திறமைவள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
செங்கீரை யாடியருளே ! (11)

அன்னை நும் வாயினமு தச்சங்கை வைக்கநீர்
ஆதியரு ளமுதமுண்ணே
அனைத்தையும் இதத்தோடு பகுத்தறிய கத்துளே
அகமியச் சங்கைவைத்து
நன்னயம் பெறுவிழிக ளுக்குமை யெழுதவே
நாமில்லை யவனுண்டெனும்
நடுநிலைது லங்கிடச் சுகூதுசெய் ஹக்கனிடை
நற்கிருபை மையதிட்டு
அன்னதரு வென்னஅரு ளுங்கரக் காப்பிடுக
அகிலதல மும்புரக்க
அடர்கொடுமை யியுலீசு வெதிரிட வராமலே
ஆக்கினைக் காப்பதிட்டுச்
சென்னெலுயர் தரளநகர் வாழ்ந்திடுமி ளம்பிள்ளை
செங்கீரை யாடியருளே
திறமைவள ருஞ்செய்டு தாவுதொலி யேயினிய
செங்கீரை யாடியருளே (12)

க(று)க்கனின் அருள்பெருகு மானந்த வாரியிற்
கதிரெனவிளங்கு மணியாய்க்
காணரிய மாதவம தென்றுளம் விரும்புவர்
கருத்துற நிறைந்தபொருளாய்
மக்கநன் னகர்வந் துதித்தமகு மூதுநபி
மனமகிழ்ந் தினிதாகவே
வையகம டங்கலுந் தீனிலைநி றுத்தவொளிர்
வச்ரமணி மாலை சூடி
மிக்கநவ மேவிவளர் பாலமுத ருந்தியே
விகசிதவ லங்காரமும்
மெய்யெழில் துலங்கவே மதிமுகம் இலங்கிவாய்
வீரகெற் சிதமதுறவே
திக்கெலாம் புகழவே மெய்க்கும் பசும்பிள்ளை
செங்கீரை யாடியருளே
திறமைவள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
செங்கீரை யாடியருளே ! (13)

மருவுலவு வாகைக்கி ரீடவர்த்த னர்களொடு
மகுடவர்த் தனர்கள்சூழ
மருவலர்க ளஞ்சித்தி டுக்கிட்டொ டுங்கியடர்
வாய்புதைத் தேவல்செய்யத்
தருமநெறி மாதவத் தோர்புடை நெருங்கவுயர்
சகலசம் பன்னர்பரவச்
சங்கீத சாகித்திய முத்தமிழ்ப் புலவரிசை
தனதகம் மகிழ்ந்துபாடக்
கருவுலவு முகிலளக மாதர்கள் உவந்தினிய
கனிவாயின் இசைகறங்கக்
கடலலற லெனவுலகில் கருவிகள் தொனிக்கவே
கதிரென விளங்குமெழிலார்
திருவுலவு சுந்தரமி குந்திடுமி ளம்பிள்ளை
செங்கீரை யாடியருளே
திறமைவள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
செங்கீரை யாடியருளே ! (14)

கற்பகமெ னப்புவி துதிக்கநல முற்றிடு
கரத்தரே கனத்தமணியே
கற்றவர் தமக்குள்பொ ருத்தியித யத்தின்வளர்
கச்சள மறுத்தகதிரே
வெற்பினுமி கப்பெரிய துற்பிணியி னெய்த்தவர்கள்
வெற்றிபெற வுற்றவ மிர்தே
வித்தகனி ரப்பமுறு நற்றவர்த மக்குரிய
வித்துவரி சிக்குமுகிலே
பொற்புறுக ழைக்கணுவின் முத்துமதி யொத்தசுடர்
பொற்பணைசி றக்கும் எழிலார்
புட்பமுறு கொட்டிகளி னத்தைமலர் வித்துநறை
புட்கரம திற்பரவவே
சிற்பரக மெய்ப்புவளர் முத்துநக ருக்கிறைவ
செங்கீரை யாடியருளே
திறமைவள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
செங்கீரை யாடியருளே ! (15)

கலிச்சந்த விருத்தம்

கலைமதி யென்றிருள் தவநிலை மங்கிய
கசட ரகம்புகவே
கருதிய நம்பர்கள் உளநிலை நின்ற
களங்கம் அகன்றிடவே
உலைவொடு சின்பரி ஆலகை யினங்கள்
ஒடுங்கி மடங்கிடவே
உடைபடும் வங்க மடைந்தென வம்பர்
ஒதுங்கி யடைந்திடவே
குலைபுலை இங்கினி நிலையிலை யென்று
குலைந்து புறஞ்செலவே
குருமுறை தங்கிய தரள மெனும்பதி
கொழுநிதி பொங்கிடவே
அலைவற வெங்கும் வளங்கள் பொருந்தவே
யாடுக செங்கீரை
அரசென வளர்செய்கு தாவூ தொலியே
ஆடுக செங்கீரை ! (16)

செந்திரு வெங்கும் நிறைந்து வுவந்து
செயஞ்செயம் என்றிடவே
தீதகலத் திருமா மறை நீதி
செழித்து விளங்கிடவே
சுந்தரமும் பிரப லீக மிகுந்து
துலங்கி வளர்ந்திடவே
தூதி றசூலுளம் மேவிய நன்பு
தொடர்ந்து பிறங்கிடவே
சந்தகில் குங்கும முஞ்செறி தண்டலை
தாங்கிய மன்றல்களார்
தரள மெனும்பதி யவர்க ளினங்கள்
தழைத்து நயம்பெறவே
அந்தர ருந்தொனி செய்து மகிழ்ந்திட
ஆடுக செங்கீரை
அரசென வளர்செய்கு தாவூதொலியே
ஆடுக செங்கீரை! (17)

சோதியருட் கிருபை மேவிய மதியே
சுந்தர சற்குருவே
சொல்லார் நல்லோர் புல்லோர் பல்லோர்
சுற்றுங் கற்பகமே
பூதல மெய்ப்பிர தாப மிகுந்திடு
புண்ணிய மாமுகிலே
போத தபோதனர் யாவரும் அன்பு
பொருந்திய அற்புதமே
வாதினை யுற்றவர் தீதற வைக்கும்
மருத்துவ மாமலையே
மஞ்சார் பொழில்சூழ் தரள நகர்க்கொரு
மாதிவ்விய வடிவே
ஆதம் வழிப்பொரு ளாகிய மணியே
ஆடுக செங்கீரை
அரசென வளர்செய்கு தாவூ தொலியே
ஆடுக செங்கீரை! (18)

வாசனை குங்கும மாலை யலங்கிர்த
வாகு சிறந்திடவே
மாமணி போலுல கெங்கும் நிறைந்திடு
வண்மை சொரிந்திடவே
வீசிய தெண்டிரை போன்முர செங்கும்
வியங்கொ டதிர்ந்திடவே
வேணு மெனக்கவி பாடுவ ராகம்
விரும்பி மகிழ்ந்திடவே
தேசு வளந்தரு தரள மெனும்பதி
செல்வம் வளர்ந்திடவே
தேவர் களுந்தின மோகை பொருந்திய
திறம துறைந்திடவே
ஆசறு சந்திர வதனம் இலங்கிட
ஆடுக செங்கீரை
அரசர்கள் புகழ்செய்கு தாவூ தொலியே
ஆடுக செங்கீரை! (19)

செம்பொன் வளம்பதி மங்கையர் ஆடவர்
சிந்தை மகிழ்ந்திடவே
செங்கதி ரென்றுல கெங்கணும் நீதி
சிறந்து விளங்கிடவே
நம்பி யுகந்து நடந்தவ ராக
நலங்கள் பொருந்திடவே
நண்பொடு மேக பரந்தனை யென்று
நயந்து பெறும்பேறே
தம்புரு டன்பறை துந்துமி வீணை
தவண்டை சிகண்டியுமே
சங்கி னுடன் துடி கொம்பொடு பூரி
தடங்கொ டதிர்ந்திடவே
அம்படர் குங்கும மென்றொடை வன்புய
ஆடுக செங்கீரை
யரசர்கள் புகழ்செய்கு தாவூ தொலியே
ஆடுக செங்கீரை! (20)

## தாலப் பருவம்
### கலிவிருத்தம்

வாசந் தரும்வெள் ளேடவிழ்த்து
வரிச்சஞ் சரிகம் இசைபாடும்
மதுவின் றிவலை சொரியும்மடு
வாளை யருந்திக் குதிபாயும்
வீசுந் தரங்கத் தெழில்மணிகள்
மீன்வா னகத்துக் கிணைகாட்டும்
வெள்ளத் தடத்தின் மலரெகின
மேதியமுதுண் டுறங்கியிடும்
பேசுங் கிளியின் குதலையினாற்
பிள்ளைக் குரங்கூ சல்களாடும்
பிணைவேல் விழியார் கழங்காடல்
பெருத்த தொனிவா ரிதிநிகர
ஓசை பெருகுஞ் சாம்பநகர்க்(கு)
ஒலியே தாலோ தாலேலோ!
உடையோன் செய்கு தாவூதெனும்
ஒலியே தாலோ தாலேலோ! (21)

பின்னுந் திரைவா ரிதிஉவர்நீர்
பெருவாய் அருந்தி முகிலினங்கள்
பிறங்கப் பிறங்கல் தனைவளைந்து
பெருகக் குமுறித் தடிதடித்து
கன்னலினங்கள் தமைமருவிக்
கவிந்திந் திரகோ பாலியுடன்
கலந்து சொரிந்து நதிபெருகிக்
கழங்க மறுமா மணிவரன்றிச்
சென்னெற் பணைசென் றிடஎழிலாய்த்
திரண்டு கதிர்த்தேன் சிதறிடவே
செந்தா மரைமா துளமகிழச்
செழித்துப் பலபாழ்வு களோங்க
உன்னுந் தரள நகர்க்கரசே
ஒலியே தாலோ தாலேலோ!
உடையோன் செய்கு தாவூதெனும்
ஒலியே தாலோ தாலேலோ! (22)

வில்லின் மணிகள் எழில் பிறங்கும்
வீதி மதிகண் டுறியெழும்
வெள்ளந் திரண்டு வழிந்தோட
மேவியருந்தி வளர்ந்தோங்கும்
முல்லை யரும்பி னிணையார்க்கு
மூரற் செழுந்தேங் கனிபாலும்
முதியோர் பலர்க்கும் உவந்தருளி
முகில்போற் றானம் இடுமுரசம்
வல்லி மருங்கின் இளமாதர்
மணமா முரசும் மருவலரை
வயங்கொண்(டு) இதயந் தினமகிழும்
வாகை முரசும் வாரிதிநேர்
ஒல்லை யகலாத் தரளநகர்க்(கு)
ஒலியே தாலோ தாலேலோ!
உடையோன் செய்கு தாஹுதெனும்
ஒலியே தாலோ தாலேலோ! (23)

போதம் வளரப் புகழ்வளரப்
புண்யம் வளரப் பொருள்வளரப்
புனிதம் வளரத் திருவளரப்
பூமான் வளரப் பொய்யணுகா
வேதம் வளர நயம்வளர
மேன்மை வளர அருள்வளர
வெற்றி வளர நிதிவளர
வேணும் பலபூ ஷணம்வளர
நீதம் வளர நிலைவளர
நித்ய சுபசோ பனம்வளர
நெறிநேர் வளர மாதவத்தோர்
நினைக்குங் கிருபைக் கடல்வளர
ஓதுந் தரள நகர்வளரும்
ஒலியே தாலோ தாலேலோ!
உடையோன் செய்கு தாஹுதெனும்
ஒலியே தாலோ தாலேலோ! (24)

தாங்கும் பவளக் கால்நாட்டிச்
சட்டம் வயிரத் தால்பூட்டித்
தாளமணிச் சங்கிலி மாட்டித்
தங்கப் பலகை யினைச்சூட்டி
பூங்கொம் பலர்பஞ் சணை விரித்துப்
பொற்பூ ஷணங்கள் இனிதிணக்கிப்
புதுமா மணங்கள் எழில்பரவப்
பொருந்தும் மதிபோல் எனவிருந்து
கோங்கின் அரும்பின் முகையலர்த்துங்
கொங்கைக் குடங்கள் ததும்பவரும்
கவுரி மடவார் தாலாட்டுங்
குழுவானவர்கள் பெருந்துதியும்
ஓங்குமணி யூசலி லாடும்
ஒலியே தாலோ தாலேலோ !
உடையோன் செய்கு தாவூதெனும்
ஒலியே தாலோ தாலேலோ ! (25)

### கலிச் சந்த விருத்தம்

செந்தா மரைமான் வந்தார் சயமே
சீரார் நேரோரே
செங்கோல் அரசே மங்கா நவமே
தேனார் தாரோரே
இந்தா ரமுதே செந்தேன் நதியே
யேதார் வீரோரே
யெங்கோன் ஒலியே பைங்கார் முகிலே
யேரார் பேரோரே
சந்திரோ தயமே ஐந்தார் மருவே
தாலோ தாலேலோ
சந்தார் வனமே சிந்தா மணியே
தாலோ தாலேலோ
தந்திரா திபரே கொந்தார் புயரே
தாலோ தாலேலோ
தனியோ ளருள்செய்கு தாவூ தொலியே
தாலோ தாலேலோ ! (26)

ஆரணக் கதிரே மாதவர்க் குயிரே
ஆராய்வார் நாவே
ஆதனக் குருவே யோகநற் றவமே
ஆவாரீ மானே
காரணக் கடலே ஞானவுற் பனமே
காவே மாதாவே
காவலர்க் கரியே நாவலர்க் கறிவே
காரா சீமானே
தாரணிக் கதியே மாமணிக் கலனே
தாலோ தாலேலோ
சார்பவர்க் கமுதே வாசமுக் கனியே
தாலோ தாலேலோ
தாரணிப் புயரே வானகத் தமுதே
தாலோ தாலேலோ
தனியான் அருள்செய்கு தாஹு தொலியே
தாலோ தாலேலோ (27)

## சந்தக் கலி விருத்தம்

ஒருவனை நினைவுறு மாலோரே
உயர்கதி தருமறை நூலோரே
வுவகையி னொடுபணி காலோரே
வுதவிய வமுதருள் மேலோரே
திருநெறி யரசுறு கோலோரே
ஜெயமுற வணிகதிர் வேலோரே
திறநவ முளைதரு சாலோரே
தெரிதரு மொழியுறு பாலோரே
கருதலர் முடியிடி தாலேலோ
கதிரென வுலகொளிர் தாலேலோ
கடலிடை வருமணி தாலேலோ
கனமுத வியநிதி தாலேலோ
தருவென வளர்கர தாலேலோ
தருமநன் னெறிவரை தாலேலோ
சகலக லையறிவு தாலேலோ
செய்கு தாஹுதொலியே தாலேலோ!! (28)

மதிகதி ரிலகிய பூமானே
மதுவிரி மலருறை பூமானே
மனநிலை யறிவுறு வீமானே
அறிஞர்கள் மகிழுற வீமானே
அதிவித வரசர்கள் கோமானே
வகநிலை தவமுயல் கோமானே
அருள்பெரு கவும்வளர் சீமானே
அணிவளம் உறுவரை சீமானே
பதிபுகழ் வளர்மணி தாலேலோ
பலகலை தெரிமதி தாலேலோ
பதவிகள் தருநிதி தாலேலோ
பவுசுறு குலமணி தாலேலோ
சதுமறை விதியறி தாலேலோ
தமனிய வரையொளிர் தாலேலோ
தரளநன் னகரிறை தாலேலோ
செய்கு தாவூதொலியே தாலேலோ ! (29)

அலைகட லெனவரு நேரோரே
அழிதர வடல்புரி வீரோரே
அடிபர விடவரு தாரோரே
அமரர்கள் புகழுறு சீரோரே
பலகலை தெரிவுறும் ஊரோரே
பருவரல் அறவருள் பீரோரே
பரிகரி தளமுறு தோரோரே
பவுசுறு திருவளர் பேரோரே
கலைநிறை யொளிர்மதி தாலேலோ
கதிதரு நவநிதி தாலேலோ
கருதுவர் உளமகிழ் தாலேலோ
கசடற வருமணி தாலேலோ
சலமுறு முகிலொலி தாலேலோ
தருமநன் னெறிவரை தாலேலோ
தரளநன் னகரிறை தாலேலோ !
செய்கு தாவூ தொலி தாலேலோ (30)

# சப்பாணிப் பருவம்

## ஆசிரிய விருத்தம்

சிங்கார மேவுமணி மாடமதின் மீதினுயர்
திருவென விளங்குமடவார்
சீறடிது லங்சியசி லம்பொலியு மங்கையுறு
செம்பொன் கழங்கின் இசையும்
மங்காதிலங் கிவளர் ஊசலிசை யாடுவர்கள்
மதுரமொழி யின்குரவையும்
மஞ்சரியின் மீதுலவு பூவையொடு கிளிகளும்
மகிழ்ந்துபுகழ் கின்றமொழியுங்
கொங்காரு முல்லையின ரும்பிற்க லங்கிர்தம்
கொண்டாடு கின்றதொனியுங்
கூறுமிவ் வொலிக்கெலாம் மேலாக மாதவர்கள்
கூறுபுக ழுக்கினியதாய்ச்
சங்கீத ராகவிசை யெங்கணும் விளங்கவொரு
சப்பாணி கொட்டியருளே
தாளநகர் வளர்செய்கு தாவூதொலி யேயினிய
சப்பாணி கொட்டியருளே ! (31)

மண்ணெழில்பி றங்கநல மேவிவளர் கொண்டலும்
மாதமும் மாரிசொரிய
வானரொடு அரம்பையர்கள் சுபசோபனங் கூற
மாதவர் உவந்துபோற்
கண்ணெழில்பி றங்கவிரு செவிகளுக் கேகலைக்
கடலமுது சாரமாரக்
கல்விப்ர சங்கத்த மிழ்ப்புலவ ரினிதினொடு
கவிதைரஞ் சிதமதுறவே
பண்ணெழில்பி றங்கநகை கொஞ்சரஞ் சிதமதுறு
பவளவா யமுதம் ஒழுகப்
பாரரசர் கிருடாச லம்பரவ வுதவியருள்
யாதபங் கயம் அதிரவே
தண்ணெழில்பி றங்கமல ரங்கைகள் சிவப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தாளநகர் வளர்செய்கு தாவூதொலி யேயினிய
சப்பாணி கொட்டியருளே ! (32)

தீதகல வுங்கொடிய பாதகமு டன்பழி
தியங்கிவெளி சென்றலையவே
சேரலர் உழன்றுநிலை யேதவறி நின்றுடல்
திடுக்கொடுந டுக்கமுறவே
சீதளம்வி ளங்குமதி யானனம் இலங்கவொளிர்
சிற்றிடைது வண்டசையவே
செங்கைமலர் பஞ்சணைய றைந்துவிளையாடவே
செம்பொனின் பணியதிரவே
மாதவம்வி ளங்குமறை வேதியர் உளங்கனிவ
தாகியும் மகிழ்ச்சியுறவே
மாமாது ஜெயமேவி வர்த்தகர் செழித்துநித
மாதுல்ய மாகவளரத்
தாதலர் விளங்குமர வப்புயமி லங்கவொரு
சப்பாணி கொட்டியருளே
தரளநகர் வளர்செய்கு தாவுதொலி யேயினிய
சப்பாணி கொட்டியருளே! (33)

தொனிவரியி லாதமறை நெறிதவறி நின்றிடரு
துஷ்டர்கள் உளம் பதறவே
சொல்லறிவ றக்கெடும் புல்லர்கள் அகத்தினுஞ்
சொற்பொருள் துலக்கமுறவே
இனியசரா ஹின் முறைமை பெருகிய மகத்துவமொ
டியல்புநிலை பெற்றுவரவே
ஈனனிபு லீசுடல் நடுங்கவே மாதவர்கள்
இன்சொலிசை பொங்கிவரவே
கனியெனவு வந்தவர்கள் துயர்பிணி பவங்களொடு
கசடிடர் அகன்றுசெலவே
கனகம்வளர் பழனநிறை பைங்கூழ்செ ழித்துக்
களங்கறவி ளங்கிவரவே
தனியனை உவந்துருகி விரியுமலர் அங்கையொடு
சப்பாணி கொட்டியருளே!
தரளநகர் வளர்செய்கு தாவூதொலி யேயினிய
சப்பாணி கொட்டியருளே (34)

மங்குல்தவழ் தண்டலை மதுத்திவலை யுண்டுமட
வாளை வெடி கொண்டுதாவி
மந்திகள்வெ ருக்கொளவும் முக்கனியு டைத்தேகி
வானதியி னூடுலவியே
சங்கமுறு மகரங்க ளோடுவிளை யாடியே
தண்பணைகு தித்துலாவச்
சங்கொடுவ லம்புரியி னங்களிசை பாடிவளர்
சாகரம தென்னுநதிசூழ்
திங்களென வெண்சுதையி லங்குமணி மாடமுடி
சேணிடை பிறங்க வெழிலாய்ச்
செல்வம்வள ருஞ்சாம்ப நன்னகர் விளங்கச்
சிறந்திடும் இளம்பரிதியே
தங்கமக மேரனைய வொண்புயம் இலங்கவொரு
சப்பாணி கொட்டியருளே!
தரளநகர் வளர்செய்கு தாவுதொலி யேயினிய
சப்பாணி கொட்டியருளே! (35)

### கலிச்சந்த விருத்தம்

இந்தென வுந்திகழ் தொந்தி குலுங்கவே
எட்டியு தைந்தாட
எழுதற் கரிதுறு மழலைக் குரல்மொழி
எழில்வாய் அமுதொழுக
சந்த நிறைந்த சதங்கை யிதங்கொடு
சத்தமு றப்பாடத்
தனுவைச் சதமில வெனநற் றவமுயல்
தாபதர் உள்மகிழச்
சிந்தனை கொண்ட கணங்கள் அகன்று
தெறித்துவெ றித்தோடத்
திறமுற் றுமதடி யகமுற்றவரிடர்
தெரியா தயலோட
கொந்தல ரும்புய வந்தம் இலங்கவே
கொட்டுக சப்பாணி
குருவென வளர்செய்கு தாவூ தொலியே
கொட்டுக சப்பாணி! (36)

மண்டல மெண்டிசை விண்டினொ டண்டம்
வருந்திய சைந்திடவே
மாமறை கீதபு ராணச வுந்தர
வாரிதி பொங்கிடவே
அண்டர்க ளுந்துதி கொண்டும கிழ்ந்து
அகங்கள்கு ளிர்ந்திடவே
ஆதர வென்றவ ரன்புற வேயெதிர்
அடையலர் மங்கிடவே
வண்டணி குங்கும மாலைய சைந்து
மணங்கள்க மழ்ந்திடவே
மாதவ ரோதிய பாவின் இசைக்கொரு
மத்தள மாகிடவே
கொண்டல் விளங்கவ ருங்கர நிதியே
கொட்டுக சப்பாணி
குருவென வளர்செய்கு தாவூ தொலியே
கொட்டுக சப்பாணி! (37)

மங்குல் இடிக்குலம் ஓடிந டுங்கி
மயங்கி அலைந்திடவே
மாமணி சேரலை வாரிதி யோசை
மருண்டு கலங்கிடவே
சிங்கமு டன்மிரு கங்களி னங்கள்
தியங்கி மெலிந்திடவே
சீரறி யான்இபு லீசுவெ ருண்டு
திடுக்கொடெ ழுந்திடவே
பொங்கிய வெம்பிணி தங்கிய பேர்கள்
புலம்பல் அகன்றிடவே
பூதல மேவிய தீவினை மாறு
புறங்கொடு பின்செலவே
கொங்கலர் குங்கும மாலைபி றங்கவே
கொட்டுக சப்பாணி
குருவென வளர்செய்கு தாவூ தொலியே
கொட்டுக சப்பாணி! (38)

பற்றலர் சித்தம துற்றவ லிப்பகை
பற்றற விட்டோடப்
பங்கய மாதருள் பொங்கி நிறைந்து
பலங்கள் வளர்ந்தேற
நற்றவ முற்ற மனத்தர் நினைத்த
நடத்தை கதித்தேற
நந்தலை வாரிதி தங்குல கெங்கு
நலங்கள் சிறந்தேற
முத்தமி முற்ற கவிப்புல வர்க்கருள்
முத்திமி குத்தேற
முங்கையின் மீதுறு சங்கிலி கொஞ்சி
முழங்கிமி குந்தேற
கொத்தலர் முத்தணி யுற்ற கரத்தொடு
கொட்டுக சப்பாணி
குருவென வளர்செய்கு தாஹு தொலியே
கொட்டுக சப்பாணி (39)

கடல்சுவ றிடமலை பொடிபட வடவை
கலங்கி யெழுந்தோடக்
கருதலர் நெடுமுடி யகமுடல் பதறுதல்
கண்டு மருண்டோடப்
படவர வதின்உடல் நெரிதர முடிகள்
பதிந்து பதிந்தாடப்
படிகட கடெனத் திசையுறு மதகரி
பரிவொ டுலைந்தாடத்
தடமுகி லிடியின மலைவுற நிலைகள்
தயங்கி மெலிந்தாடச்
சதுமறை யறிவினர் அகமகி ழொடுஜெய
சங்கீ தம்பாடக்
கொடுமுடி யுளவிரு புயவரை யசையவே
கொட்டுக சப்பாணி
குருவென வளர்செய்கு தாஹு தொலியே
கொட்டுக சப்பாணி! (40)

# முத்தப் பருவம்

**ஆசிரிய விருத்தம்**

இல்லற முடன்துற வறங்களும் நிறைந்த புகழ்
ஏகபரி பூரணமதாம்
இறைவனருள் பெருகியொரு வடிவெனவி ளங்கியுல(கு)
எங்கும்இற சூலின்நியதி
நல்லற மிகுந்துவள ரும்படி முயன்றுவருள்
நற்றிவலை சிந்துமுகிலே
ராஜத சவுந்தர விலாசபுய சுந்தர
நாவலர் உவந்தமணியே
முல்லைநகை மாதர்முக வில்லொளி பிறங்கவே
முண்டகத் தலர்கள்குவியும்
முத்துநக ருற்றவர்செ ழித்துநலம் மிகவே
முளைத்தகற் பகதாருவே
பல்லவர்து திக்கவே சொல்லமிர்த ரஞ்சிதப்
பவளவாய் முத்தமருளே
பலகலைகள் உணர்செய்கு தாவுதொலியே இலகு
பவளவாய் முத்தமருளே! (41)

வாகுசெறி திண்புயவி ராஜர்கள் இறைஞ்சவளர்
மாதவமி குத்தவடிவே
வாரிதிகள் சூழுமுல கெங்கணுவி ளங்கவருள்
வள்ளலென வந்தமுகிலே
ஆகுலம தொடும் உமது பாதமலர் நாடியே
யடைந்தவர்க ளுக்கமுதமே
ஆகமபு ராணகலை வேதியர்த போதனர்
அடைந்துவாழ் பஞ்சதருவே
நாகரிக முத்துநகர் மேவிவள ரத்தவர்கள்
நாடுநல முக்திபெறவே
நாவிலிறை தூதுமகு மூதுநபி கவிமாலை
நன்குறவி ளங்கவினிதாம்
பாகமுது முக்கனிகள் மதுரங்க னிந்தொழுகு
பவளவாய் முத்தமருளே
பலகலைகள் உணர்செய்கு தாவுதொலி யேயிலகு
பவளவாய் முத்தமருளே! (42)

உடல்குழைய வுங்குதித் தேவடிவி லங்கவே
யோசைபற் பலவிதமதா
ஓதியுளம் மகிழ்பெருக ஆதியா னந்தநிலை
யுற்றுணர்தல் கொடுபுகழ்ந்தே
மடல்விரியு முண்டகம லர்க்கர மெடுத்தினிய
வள்ளைவா யமுதமுண்டே
மாசற்ற வித்தென முளைக்கொண் டெழுந்தநன்
மணியெயி றிலங்க நெடிதாம்
கொடியகுபிர் அடையலர்கள் மகுடமுடி தளரவே
கொண்ட விரதங் குலையவே
கொந்துலவு மாமனத்(து) ஈமான்முளைக்கொண்ட
கோவே குணக்குரிசிலே
படிபுகழு மின்சொன்மறை மதுரங் னிந்தொழுகு
பவளவாய் முத்த மருளே!
பலகலைக ளுணர்செய்கு தாவுதொலி யேயிலகு
பவளவாய் முத்தமருளே! (43)

தண்ணெழில் பிறங்மணி வாரிதியின் நீள் அலை
தயங்கிவரு மின்னமுதினுந்
தாரகை இலங்கும் உயர் வானகம் விளங்க எழு
சந்திரகலை யின்னமுதினும்
விண்ணுற அடர்ந்தலை புரிந்துந்து சிந்தினிடை
மேவிவரு கின்றமுதினும்
மேதினியெ லாம்படரும் சீவசரம் யாவினும்
விளங்கிவரு கின்றமுதினும்
திண்ணிலவு வானவர் அரம்பையர் உவந்துவளர்
தேவருல கத்தமுதினுஞ்
செந்தேனும் முக்கனிக லக்கிவடி கொண்டிடுந்
தெளிவினுந் தெளிவதான
பண்ணுறுமி சைக்கினிய மதுரங்க னிந்தொழுகு
பவளவாய் முத்தமருளே
பலகலைகள் உணர்செய்கு தாவுதொலி யேயிலகு
பவளவாய் முத்தமருளே! (44)

நிகரரிய தற்பர பராபரன் அருட்கிருபை
நித்தம் அக லாதஜெயமே
நீதிநிலை யேதவறி லாதரசு புரிகின்ற
நிருபர்கள் உவந்தபுகழே
புகலரிய மாமறையின் அருளமுதம் உண்டே
பொருந்திவள ருங்கிள்ளையே
பூச்சக்ர வாளகிரி சூழுலகம் யாவும்
பொழிந்திடுங் கருணை முகிலே
நகரரிய திரவியமும் நாடுமலை காட்டினொடு
நரலைபடு திரவியமெலாம்
நாடுவர் தமக்கருளும் வெண்டரள மாநகர்
நலம்பெருக வுற்ற நவமே
பகரஅரிய செஞ்சொலிசை மதுரங் கனிந்தொழுகு
பவளவாய் முத்தமருளே
பலகலைகள் உணர்செய்கு நாவுதொலி யேயிலகு
பவளவாய் முத்தமருளே ! (45)

### கலிச்சந்த விருத்தம்

கடல்சுற் றுலகெவை புகழ்நற் றவமுறு
கதிருற்றிடு கதிரே
கடியுற் றறநெறி பெருகச் சொரிதரு
ககனுற்றிடு முகிலே
இடருற் றிடுபிணி யவருக் கினிதருள்
இதயத் துறுமணியே
இகலுற் றெதிரிடு செறுநர்த் திரள்அற
எதிருற்றிடு மரியே
தடமுற் றறிவினர் பகரப் பொருள்பல
தருமுத்தம வடிவே
சசியுற் றெழில்மணி புனல்கொட்டி யவொளிர்
தரளப் பதிநிதியே
முடிவற் றவனருள் அகமுற் றிடுமதி
முத்தந் தந்தருளே
முதலவ னருள்செய்கு நாஹு தொலியே
முத்தந் தந்தருளே ! (46)

கைத்திற முற்றம ருத்துகள் நீதி
கதித்தெழு சுந்தரமே
கட்டளை யுற்றவ ருட்கட லேகலை
கற்ற கரும்புயலே
மெய்த்தவ முற்ற மணிக்கல னேகுண
மிக்க சவுந்தரமே
வித்தை மிகுந்த மகத்துவ மேவளர்
வித்துவ ரஞ்சிதமே
பொய்த்தட ருற்றகு பிர்க்கல மேகமழ்
புட்ப முறுந்தரமே
பொற்பதி புக்கும் வழித்துறை யைத்தரு
புத்தி யலங்கிர்தமே
மொய்த்தொளி ரத்னம ணிக்கதி ரேயொரு
முத்தந் தந்தருளே
முதலவ னருள்செய்கு தாஹு தொலியே
முத்தந் தந்தருளே ! (47)

அருமறை யுற்றெளி விதயம கிழ்ச்சிகொ(டு)
அச்சம் அறும்பொருளே
அலைகடல் சுற்றிய புவியின் வினைக்கச(டு)
அற்றுவருங் கதிரே
தருவென வுற்றருள் கொடைமகி மைக்கொரு
தத்வ முறுங்கரமே
தரியலர் கட்குரு மிடிவரி யர்க்கொரு
தப்பறு சந்திரனே
திருநெறி மிக்குள தவநிலை யுற்றிடு
திக்குள வொண்கிரியே
திகழ்தரு பொற்புறு தரளந கர்க்குயர்
சித்தொளி ருஞ்சுடரே
முருகலர் மொய்த்திந் மரைமுக முத்திட
முத்தந் தந்தருளே
முதலவ னருள்செய்கு தாஹு தொலியே
முத்தந் தந்தருளே ! (48)

ஆதிப ரம்பரையாவுல கெங்கணு
மாக நிறைந்திடவே
ஆதமு தற்பல வேதச வுந்தர
மாநபி மார்களிலே
மாதவ முங்கிரு பாகர மேவிய
மாணெழி லன்புருவாய்
மக்கந கர்க்குயர் சொர்க்கந கர்க்கு
மதிக்க வரும்பேறாய்த்
தூதென வந்திற சூல்நபி தீனிலை
சூழ வெழுஞ்சுடரே
சுந்தர மேவிய செந்திரு மாது
தொடர்ந்த வலங்கிர்தமே
மூதறி வொன்றிடு மாநிதி யேயொரு
முத்தந் தந்தருளே
முதலவ னருள்செய்கு தாவூ தொலியே
முத்தந் தந்தருளே! (49)

எத்திசை யும்புக ழுத்தம நற்றவ
முற்று வரும்பேறே
ஏதமி லாதொரு வெண்குடை நீதி
யிலங்கிய ராஜதமே
கற்றவ ரன்புறு சித்தம் நிறைந்து
கதித்தெழு மாமதியே
கருதல ருக்கரி யேறென வுலகோர்
காதல் கொளுங்கதியே
சுத்தம றைப்பொரு ளைத்தெளி வாக்கிய
சுந்தர சற்குருவே
சோதியை நாடொறு மேமற வாது
துதிக்குங் கற்பகமே
முத்துந கர்க்கதி ஜயமே நிதியே
முத்தந் தந்தருளே
முதலவ னருள்செய்கு தாவூ தொலியே
முத்தந் தந்தருளே! (50)

# வாரானைப் பருவம்

**கலி விருத்தம்**

செம்பொற் கலசத் திருவருக
தெவிட்டா வமுதத் தேன்வருக
சித்தாந் தவர்கட் குயிர்வருக
தீண்டா மணிச்செஞ் சுடர்வருக
அம்பொற் கிரண மலைவருக
அலையா தாசைக் கடல்வருக
அறிவோ ரிருகண் மணிவருக
அவுலி யாக்கள் இனம்வருக
நம்புற் றவர்க்கன் பருள்வருக
நாவல் லவர்கள் நாவருக
நலஞ்சே ரறிவின் நிலைவருக
நன்றே விளைக்கும் பொருள் வருக
உம்பர்க் கலைமா மதிவருக
வோங்குந் தவத்துள் ளகம்வருக
ஒளிசேர் செய்கு தாவுதெனும்
ஒலியே வருக வருகவே! (51)

வாசம் பொருந்துஞ் செழுஞ்சோலை
மதுவார்ந் திலங்கு மலர்வருக
வானோர் மனுஜின் னம்புகழும்
மதுர முறுமுக் கனிவருக
ஆசுற்றி றிடுநோ யவர்களிக்கும்
அருமா மருந்தே யிவண் வருக
அகில மொருகோ லினிதோச்சும்
அரசர்க் கரசே யிவண்வருக
தேசு நிறைந்த மாதவத்தோர்
சிந்தைக் குரிய துணைவருக
செஞ்சொற் கவிஞ ருளமகிழத்
தெவிட்ட வருள்கற் பகம்வருக
ஓசை பொருந்துங் கலைக்கடற்குள்
உதிக்கும் மதியே யிவண்வருக
வொளிசேர் செய்கு தாவுதெனும்
ஒலியே வருக வருகவே! (52

ஆதி யிறையோன் அருள்வருக!
அருமா மறையின் முறைவருக!
ஆவ லுறுமா நிதி வருக!
அகிலம் விளங்குங் கதிர்வருக
போதம் விளைக்கும் புயல்வருக
புண்ய நவரஞ் சிதம்வருக
பொய்யா நிகுமத் தேவருக!
புலவர் அகத்தின் மதிவருக
சீத குணசுந் தரம்வருக!
திங்கட் கொழுந்தே யிவண்வருக!
செங்கோல் அரச ரேவருக
தீனுக் குவந்த மணிவருக
ஓதும் அறிவுக் கடல் வருக
ஓயாக் கிருபை யுளம்வருக
ஒளிசேர் செய்கு தாவுதெனும்
ஒலியே வருக வருகவே! (53)

மங்கா தொளிரு மதியமென
வளர்மா தவத்தின் மதிவருக
வம்புக் குபிரின் இருளகற்றி
வயங்குஞ் செழுஞ்செஞ் சுடர் வருக
சிங்கா சனமுற் றினிதோங்குஞ்
சீமானெனுங்கோ மான்வருக
தேசம் புகழ்மா தவர்க்குரிய
தெவிட்டா அமுதக் கடல்வருக
கொங்கார் மரவப் புயமிலங்குங்
குருசிற் குலமா மணிவருக
கொழுஞ்சீ தளமா மலர்வருக
குணமே வியபொன் மலைவருக
உங்கால் சதமென் றிருதயத்துள்
உவந்தார்க் கினிய வுயிர்வருக
ஒளிசேர் செய்கு தாவுதெனும்
ஒலியே வருக வருகவே! (54)

பொன்னு மணியும் எனவுலகிற்
புகழும் பொருளே யிவண்வருக
பொங்கு நெகுமத் தெனுங்கடலைப்
பொருந்தும் பொறையே யிவண்வருக
கன்னல் மணியே வளைமணியைக்
களங்காக் கிடும்நித் திலம்வருக
காதல் உறுமா தவத்தோர்கட்
கருணை தருங்கண் ணே வருக
செந்நெற் பணைசூழ் சாம்பநகர்
செழிக்கும் அமுதக் கனிவருக
தேன்பால் சீனி தெவிட்டாத
செஞ்சொற் றருமஞ் சுகம் வருக
உன்னும் பொருள்கள் இனிதளிக்கும்
உடையோன் கிருபை யொளி வருக
ஒளிசேர் செய்கு தாவுதெனும்
ஒலியே வருக வருகவே ! (55)

### ஆசிரிய விருத்தம்

முருகுடைத் தேடவிழ்த் தனுகாவி னங்கூடிய
முகில்படிந் தினிதினார்க்க
முக்கனித் தேனுடைந் தூறுதன் டலைசூழு
முண்டகம லர்க்கள்குவிய
கருவுதித் திடும்வலம் புரிகளினி தாகவே
கதிரிலகு முத்தமீனுங்
கழனிசெறி யுஞ்சாம்ப வளநாட தென்றுங்
களங்கறவி ளங்கவெழிலாய்த்
திருமிகுத் திடுமகா மேரெனவு தித்தகில
தேசதே சம்புகழவே
செங்கோல் செலுத்தியுயர் துங்கசிங் காரமுறு
தேவேகு ணக்குரிசிலே
மருமலர்த் தொடையலணி மார்பக மிலங்கிடும்
வள்ளலிங் கே வருகவே
வல்லபம் பெறுசெய்கு தாவுதொலி நாதரே
வருகவிங் கே வருகவே ! (56)

செய்யுமா மறைவளர நெறிநீதி வளரவே
செங்கோல்செ ழித்து வளரத்
திறம்வளர நிதிவளர அட்டலட் சுமிவளர
செல்வங்க தித்துவளரத்
துய்யவன ருள்வளர நலம்வளரு மாதவர்கள்
துங்கசிங் காரம்வளரச்
சோனமகிமை வளர்தரள மாநகர்வி ளங்கிவளர்
சுபசோப னங்கள் வளர
மெய்யறிவு நிலைவளர வனுதினமும் அகலாது
மேன்மைமரி யாதைவளர
மேலவர்கள் இதயா சனத்துறுதி மிகவளர
வெற்றிப்பிர சங்கம்வளர
வய்யகம் புகழ்பெருகி வளரவந் திடுகருணை
மாசிலா மணிவருகவே
வல்லபம் பெறுசெய்கு தாவுதொலி நாதரே
வருகவிங் கே வருகவே ! (57)

பாகுபால் கற்கண்டு செந்தேன் வடிக்கொண்ட
பானமது வுந்தெவிட்டப்
பலகலையி னறிவாக ரந்தெவிட் டாதுண்டு
பகரும்ப சுங்கிள்ளையே
ஏகனருள் பெருகிவள ரானந்த வாரிதி
எழுந்து வளர்கின்ற மதியே
ஏதிலர்கள் உள்ளம் கலங்கவும் கர்ச்சித்(து)
இருக்கும் இளஞ்சிங்கமே
கோகிலம் பூவைகிளி பாடமயி லாடவே
கொண்டலடை யும்பொழில்கள்சூழ்
கோகனத மாதுவள ருந்தரள மாநகர்
குணம்பெறவி ளங்குகதிரே
வாகுசெறி திண்புயவி ராசர்கள்சி ரோமணீ
வருகவிங் கேவருகவே
வல்லபம் பெறுசெய்கு தாவுதொலி நாதரே
வருகவிங் கே வருகவே ! (58)

ஓசையுறு கிண்கிணிச தங்கைதண் டைகளலற
வொண்புயம தேகுலுங்க
உல்லாச கம்பீர சல்லாப மேவிய
வுளங்களித தும்பவினிதாய்த்
தேசுவுறு செங்கிரண மெய்யெழில் துலங்கவளர்
சிங்கார விடைதுவளவே
தேனொழுகு வனசமல ரானனம்வி ளங்கவே
செய்யமணி யெயிறிலங்கத்
தூசிகள ளைந்துவிளை யாடியருள் மேவிய
சுடர்க்கரமி ரண்டுவிரியச்
சோமனென வெண்சுதை பிறங்குமதி ளாடைகள்
சூழுமணி முன்றினிடையே
வாசமுறு செங்கமல மெல்லடி பெயர்த்திட்டு
வருகவிங் கேவருகவே
வல்லபம் பெறுசெய்கு தாவுதொலி நாதரே
வருகவிங் கேவருகவே! (59)

செஞ்சொலறி வாளர்புக ழின்சொல்ரஞ் சிதமேவு
செல்வமே வருக வருக
திக்குலகெ லாம்வளரு மிக்கதீ னுக்குரிய
தீபமே வருக வருக
கஞ்சமலர் மாதுசெறி குங்குமவ லங்கலணி
கனமேரு வருகவருக
காவலரி றைஞ்சவே நாவலர்து திக்கவருள்
கற்பகம் வருக வருக
தஞ்சமென வந்தவர்கள் துயர்பிணிய கற்றிடுஞ்
சஞ்சீவி வருகவருக
சந்ததமு மாறாத மாதவமி குந்தநய
தர்மமே வருக வருக
மஞ்சுலவு சோலைசூழ் தரளநக ருக்கினிய
மதியமே வருக வருக
வல்லபம் பெறுசெய்கு தாவுதொலி நாதரே
வருகவிங் கேவருகவே! (60)

# அம்புலிப் பருவம்

**ஆசிரிய விருத்தம்**

சீலமறி யாதகுபிர் மாசறவ கற்றியுயர்
செங்கோல் செலுத்தியெங்குந்
தீன்பயிர்வி ளைக்குமகு மூதுநபி நற்கிருபை
சிந்தையிற் குடியதாகக்
காலமொரு மூன்றறிந் தேயினிய மாதவர்கள்
கண்மணிய தாய்விளங்கிக்
கலையறிவி னிகபரமி குந்துநன் னெறிநீதி
கழறும்ப்ர சங்கமுகிலே
மாலுறவு வந்தடிப ணிந்தவர்செ ழிக்கவே
மாதுல்ய வரிசையருளி
மட்டுலவு சோலைசூழ் தாளநக ரெந்நாளும்
வாழ்வுபெற வந்துதித்தே
ஆலமதெ லாம்புகழ ஆளுமிவர் சமுகத்தில்
அம்புலீ யாடவாவே
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
அம்புலீ யாடவாவே ! (61)

உலைவிலான் ஆதியிறை ஒளிவினில் உதித்தெவையும்
உறுதி பெறும் வித்ததான
வுண்மையிற சூல்நபிய ருட்கடலு தித்தெழுந்(து)
உயர்மறையின் அமுதமுண்டு
மலைவிலா நற்றவ மிகுத்தொளி பரப்பியே
மாறிலா நிலை பொருந்தி
வந்தடைந் தோர்கலிய கற்றுதற் காயினிய
வட்டமுறு பூரணமதாய்க்
கலைநிலா மதியிங் கிருப்பதென எண்ணியெதிர்
காணப் பயப்படுகிறாய்
கவலையற இங்குவர வுனதுடல் உறைந்திடு
களங்கதனை யகலவைப்பார்
அலைவிலா அருள்பெருகும் வள்ளலாம் இவர்முனம்
அம்புலீ யாடவாவே
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
அம்புலீ யாடவாவே ! (62)

படந்தரு புயங்கனும்வி ழுங்கையிலெ ழுந்துடல்
படர்ந்துவரு கின்றவிடமும்
பறந்திரவி னும்பகல் நடந்தறவு ழன்றுடல்
பரிந்துவரு கின்றவயர்வும்
தொடர்ந்துக திரின்பிறகெ ழுந்துவரு கின்றமெய்
துவண்டுற வெதும்புகனலுந்
துலங்குமணி மண்டபநு ழைந்ததி லுலைந்துமெய்
சுருங்கவுறை கின்றகுறையும்
மடந்தையர் சினந்தனு தினந்தொறு முலைந்துடல்
வருந்தியறை கின்றமுறையும்
மனந்தனி லகங்கொடு நினைந்திடவு மும்பர்சிறை
வந்தணைதல் கொண்டகுறையும்
அடர்ந்தினம் வரும்பிணிகள் பின்செலவு வந்திடுவர்
அம்புலீ யாடவாவே
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
அம்புலீ யாடவாவே ! (63)

தெண்டிரையின் முகடெழுந் தையாறி ரட்டியே
சென்றுவரு கடிகையதிலே
திகிரிவரை அண்டபகி ரண்டமுத லாகச்
செழுங்கிரண மேபரப்பி
மண்டலமெ லாஞ்சுற்றி வருகின்ற நீயிவர்முன்
வரவேன் பயப்படுகிறாய்
வாது செய்து பூதப்ப சாசொடுக ணங்களை
மறுகவைப் பதுகண்டையோ
சண்டையிடும் அடையலர்க் கார்க்குமத சிங்கமடி
சார்ந்தவர்க் கன்னதருவாய்த்
தயாளம் நிறை கின்றபூ ரணகடாட் சமுயர்
சற்குணவி லாசநெறியோர்
அண்டர்மக ளிர்க்கினிய வெண்டரள மாமணிமுன்
அம்புலீ யாடவாவே
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
அம்புலீ யாடவாவே (64)

பாய்ந்தடர்ப சும்பரிக ளேழையும் இணக்கியே
யடருமிர தத்திலேறிப்
படியந்த ரங்கள் தெரி யாமலும றைக்கின்ற
படலையிரு ளங்ககலவே
காய்ந்தெழுமி ளங்கதிரெ னப்பிரவை தங்கிக்
களங்கற்ற மாமணியெனக்
காதலொடு பொற்கிரண வேடவிழ லங்கிர்தக்
கமலமெல் லடிநாடியே
நேர்ந்துகலை யொன்றுகொண் டந்தவர் தமக்குள
நினைப்பதுபொ ருத்துமுரவோர்
நீயுமொரு பதினாறு கலைகொண்டெ திர்ந்திடில்
நினைப்பதுமு டிப்பதரிதோ
ஆய்ந்தமறை வேதியர்கள் புகழவரு மாதவர் முன்
அம்புலீ யாடவாவே!
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
அம்புலீ யாடவாவே ! (65)

தும்பிகள்கு டைந்துவரு கின்றநற வத்திவலை
சோனைமுகி லோடுமிகலுந்
துங்கமுறு வேதவொலி கஞ்சமும் நரம்பிசை
துளைக்கருவி யோடுமிகலும்
தம்புரொடு மும்முரச முங்குமிறல் கொண்டடரு
சாகரம தோடுமிகலும்
தண்டாமரைத் திருவு வந்துநட மாடிவளர்
தரளநகருக் கரசராய்
நம்புமவர் துன்பவினை யுங்கணம கன்றிடவே
நாடிவரு கின்றமதியாய்
நாவலர் துதித்திடக் காரணமி குத்தநய
நாகரிக முற்றமணியாய்
அம்பரம னுஞ்சுவன மும்புகழ வந்தவர்முன்
ஆடவா வெண்ணிலாவே
அரசர்பு கழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
ஆடவா வெண்ணிலாவே ! (66)

தொல்லைநா ளாய்த்தின மலைந்தலைந் தோடியுஞ்
சுகமுனக் கானதுண்டோ
சுருங்கியே குறைந்தபின் நிமிர்ந்துவளர் கின்றிடுந்
தொழிலலது வேறுமிலையே
வல்லனிற சூல்நபிகள் நாதர்முன மேநின்று
வந்தவர லாறறிந்து
மகிழ்ந்தவரு டன்பேசி நின்றதல் லால்உடல்
வருங்களங் கோதினாயில்
நல்லதவ ரைக்கண்டு மெய்மறந் தாய் உன்னை
நண்ணியவி னைப் பகுதியால்
நானறிந் தேனின்று வுனதுடலில் உற்றுவளர்
நச்சுறுக ளங்ககற்றி
அல்லலற நல்லருள்பொ ருத்துவர் மகிழ்ந்தவர்முன்
ஆடவா வெண்ணிலாவே
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
ஆடவா வெண்ணிலாவே ! (67)

எட்டவரி தானபொருள் ஆதிதன் அருட்கிருபை
என்று மக லாதமுத்து
இல்லறமு டன்துறவ றங்களும்வி ளங்கவே
எழிலுதவி யானமுத்து
கொட்டமிடு மடையலர்க ளஞ்சித்தி கைக்கவே
கோனரசி யற்றுமுத்து
கொண்டலென வாணர்கள் துதிக்கவே பொன்மாரி
கோணாத ளிக்கு முத்து
முட்டியடர் துன்பவினை பற்றறவி ளைக்கவே
முறையமுத ருத்து முத்து
மூதறிவி னோர்கள் புகழ் மாதவம்வி ளங்கிவளர்
முத்துநக ருற்றமுத்து
அட்டதிசை மெய்க்கின்ற ஆணிமுத் தாமிவர்முன்
ஆடவா வெண்ணிலாவே
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
ஆடவா வெண்ணிலாவே ! (68)

வையகமும் வானகமு மற்றுமுயிர் பற்பல
வகுத்துஇர ணங்களருளும்
வல்லவன் திருமறைத் தூதாகி யேசொர்க்க
வாழ்வுபெறும் எங்களிறசூல்
செய்யபங் கயபாத மலர்களொரி ரண்டையுஞ்
சிந்தைதனி லேநிறுத்தி
தீதுபடர் குபிரெனுங் கசடறவ றுத்துநற்
றீன்பயிர்வி ளைக்குமுரவோர்
தையலர்க ளின் சொலிசை மஞ்சரியின் மீதுலவு
தத்தைகளு வந்து பாடும்
தாளநக ராதனம் பெருகவே மாமாது
சந்ததமி குந்து வாழ்க
அய்யமற நற்கிருபை பெய்திடுத யாளர்முன்
ஆடவா வெண்ணிலாவே
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
ஆடவா வெண்ணிலாவே! (69)

வந்தையுறு மேருவைச் சேடனையி ணக்கியொளிர்
மத்துடன் கயிறுமாக
வானவர ரக்கரிரு பாகமுற நின்றமுத
வாரிதிக டைந்தமுதையே
சிந்தைகளி கொண்டுதே வாதிகளு முண்ணவே
சீருறவ ளித்தபொழுதிற்
சினமுண்டு ராகுகே தாகியுமி ரண்டுமாய்த்
தீராத பகைதொடுத்தே
தொந்தமுட னெதிர்வருவ தென்றுகுபி ராகமஞ்
சொற்செய்த படியுன்னையே
தொடர்ந்துவரு வெம்பகை தணிக்கிலா நேசர்பல
சூழவந் தாவதென் கொல்
ஐந்தருவெ னுங்கருணை நேசர்முனம் நின்றுரை (செய்து)
ஆடவா வெண்ணிலாவே
அரசர்புக ழுஞ்செய்கு தாவுதொலி நாதர்முன்
ஆடவா வெண்ணிலாவே! (70)

# சிற்றிற் பருவம்

## கலிவிருத்தம்

முருகுண் டெழுந்து தடவாளை
மூரிக் கமுகின் மிடறொ டித்து
முகில்சென் றுழக்கித் துளிகாட்டு
முதிர்ந்தே கன்னல் மணியு யிர்க்கும்
பெருகுங் கொடியந் தரநதியிற்
பிரண்டு பலவாத் தியமு ழக்கிப்
பெரியோர் களுக்கு மணத்தவர்க்கும்
பிசகா நறும்பன் னீர்தெ ளிக்கும்
தருகுந் தருவின் படியார்க்குந்
தரும நெறியோர் புடைசூழுஞ்
சதுமாமறையி னொலி முழங்குந்
தரள நகருக் கதிபதியே
திருமா மலர்ப்பங் கயத்தாளாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவார் செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே ! (71)

அலைவா ரிதியிற் பெரிதோங்கும்
அருமா மறையி னறுந்தேனை
ஆகத் தடத்துள் ளாய்நிரப்பி
அலைகொண் டிடப்பொங் கியவ்வாயாற்
கலைவா ரிதிசூ ழறிஞருரை
கசப்பாய் வெறுக்கும் புல்லர் மனைக்
கண்ணுற் றறியீ ரிடர்விளைக்குங்
கசடர் மனையுள் ளகம்வி ரும்பீர்
நலவா ரிதிசூ ழவர்மனைக்கண்
நாடி நடந்தங் குறைந்திருந்து
நன்றி வருத்து மென்பீரே
இராசர் புகழுங் குலக்கொழுந்தே
சிலைவா ரிதியி னுதல் விழியார்
அணியே சிற்றில் சிதையேலே
திருவார் செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே ! (72)

சிந்தா ருலகம் புகழ்விளக்கித்
திருமா மறையின் அருளோங்குந்
தெவிட்டா வமுத மெனுங்கலிமாச்
செழிக்குந் தீனின் பயிர்விளைக்குங்
கொந்தார் மரவப் புயமிலங்குங்
கோமா னிறசூ லுளமகிழக்
குருமா தவர்கள் தினம்போற்றுங்
குத்புல் அக்தாப் அருளோங்க
நந்தார் பழன முறுதரள
நகரம் பெருகிக் கதித்தோங்க
நலமே நிலைக்குங் கரும்பொருளே
நவமா மணியே யிருநிதியே
செந்தார்க் குதவுங் கற்பகமே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவே செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே ! (73)

முத்தாம் சுதைகொண் டினிதோங்கும்
முகடு தடவுந் திருமதிளும்
முழுமா மணியின் எழில்பிறங்க
முடிகொண் டிலங்கும் புரிசைகளும்
வித்தா ரமதா யணியணியாய்
வீடும் பெருஞ்சா ளரமுகப்பும்
மின்னுங் கதிரும் புறங்காட்டும்
மேன்மெத் தையுமண் டபமறுகும்
நற்றா மரைசூழ் பெருநதியும்
நறவந் துளிக்குங் காவனமும்
நந்தார் பணையும் பெருங்கடல்போல்
நாடி வருவோர்க் கருள்புரியும்
சித்தார்ந் திடுமா மனையுடையீர்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவே செய்கு தாவுதொலியே
சிறியேம் சிற்றில் சிதையேலே ! (74)

தங்கக் கிரண மணிமதிளுந்
தருவும் நதியுங் காவனமுஞ்
சங்கமு றுவான வர்துதியுஞ்
சதுமா மறையின் பெருவாழ்த்தும்
மங்கைப் பருவக் கனகமுலை
மாதர் களிப்பின் ஒலிமுழக்கும்
வாசம் பொருந்துங் கனிவகையும்
மாறா திளமை தருவயதும்
பொங்கும் எழில்சேர் சுவனநகர்
பொருந்து மனையோய் புவிபுரக்கும்
பூவே காவே யிருநிதியே
பொற்பூ ஷணமே புண்யகுணத்
திங்கட் கொழுந்தே நவமணியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவே செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே! (75)

தஞ்ச மெனவந் தடைந்தவரைத்
தாங்கிம னச்சஞ் சலமகற்றித்
தங்கி யிருக்க மனைகொடுத்துச்
சாரும் பிணியின் இடரகற்றி
இன்சொல் மதுர மொழிபேசி
இல்லா தவர்க்கும் பொருளுதவி
இனிதாய் அவர்கள் நகர்க்கேக
இயல்பு பெறவுத் தரவருளும்
மஞ்சு தவழுஞ் செழுஞ்சோலை
மலர்த்தேன் மடுவா ளைகளுதிர்க்கும்
வளமை பெருகுந் தரளநகர்
வாழ்வு பொருத்து மதிமதியாய்ச்
செஞ்சொ லமுத மெனவுதித்தோய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவே செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே! (76)

மானார் முகங்கண் டிந்துமணி
மாரித் திவலை யெனச்சொரியும்
மதினா நகருக் கதிபதியாய்
மற்றும் புவனத் தரசியற்றும்
கானார் கமலப் பதத்திறசூல்
கருத்துக் குவந்த காரணமே
கருணைக் கடலே தவப்பொருளே
ஹக்கா னியத்துக் கலைமதியே
தீனார் முகிலே நவநிதியே
சிந்தா மணியே செழுஞ்சுடரே
திவ்ய மணமார் மருக்கொழுந்தே
சித்தோர் புகழுந் தெள்ளமுதே
தேனார் மரவத் தொடைப்புயனே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவார் செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே ! (77)

உம்பர்க் கிறைவர் இறையருளால்
உவந்தே யிறசூற் கினிதளித்த
வுரிய புறுகான் நெறிநிறுத்த
வோங்கும் பெருந்தீன் றனக்கிசைந்த
தம்ப மெனநின் றெழில்பிறங்கித்
தருமா தவத்துக் குறுமுளையாத்
தணியாப் புகழ்கொண் டெனவிளங்குந்
தரள நகருக் கதிபதியாய்
நம்பும வர்துன் பறவகற்றி
நாலா கலையி னருள்தெரிந்து
நாலை புடைசூழ் புவியனைத்தும்
நாடும் படிக்காம் பண்டிதராய்ச்
செம்பொற் கிரணத் தவிசிருக்குந்
திறலே சிற்றில் சிதையேலே
திருவார் செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே ! (78)

மங்கா தொளிரு மிளங்கதிரே
மாசற் றிலங்குஞ் சுடர்மணியே
மாறாக் கலைதங் கியமதியே
வானோர் புகழு மணமலரே
சிங்கா ரமதா கியபொருளே
செந்தேன் ஒழுகுஞ் செழுங்கனியே
சேரார் அகத்துக் கரியேறே
தேசம் விளங்கு மழைமுகிலே
தங்கா திடரோட் டிடுமருந்தே
சகத்தோர்க் கருளுங் கற்பகமே
சந்தம் விளங்கும் இருநிதியே
தரள நகருக் கதிபதியாஞ்
செங்கோ லரசே தவப்பொருளே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவார் செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே! (79)

அரிணம் புலியோர் துறைநீருண்(டு)
ஆகம் பொருந்தி யினிதார்க்க
அரியுங் கரியு மரிபரந்தும்
அடைந்தோர் புடையின் மகிழ்ந்திருக்கச்
சரண மலர்ப்பங் கயம்போற்றித்
தானை யரசர் புடைசூழத்
தரள நகர்வந் தினிதுதித்துத்
தனிக்கோ லோச்சுந் தகையரசே
கருணைக் கடலார் செழுமுகிலே
கருத்தா ரகத்துட்க ரும்பொருளே
கவலை வருத்தும் பெரும்பிணியோர்
களங்க மறுக்குஞ் சஞ்சீவியே
செறுநர்க் கரியே திருவடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருவார் செய்கு தாவுதொலியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே! (80)

# சிறுதேர்ப் பருவம்

## ஆசிரிய விருத்தம்

சுதைமேவு பொற்கலச மணிமாட முற்றகொடி
சுடரோனி ளைப்பகலவே
துளிர்வான தித்திவலை யுறவீசி நித்தமிது
தொழிலாக வுற்றிரதமா
கதிதாவி வெற்றிகொடு செலவேபு டைத்துவழி
கடிதாந டத்தியியல்பா
ககநாடு சுற்றிவரு முகிலோடெ திர்த்துமிகு
கனமாரி கொட்டி நிறைமா
மதியோடி னுற்றுரைசெய் தெமதூரின் உற்றுவளர்
மடவாரொ டொத்திலெனவே
மருவார வுற்றுநபி புகழேசொ லிக்குமுறி
மகிழ்வார வெற்றி பெறவே
திதிமேவு முத்துநகர் உயர்வீதி சுற்றியொளிர்
சிறுதேரு ருட்டியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே ! (81)

முருகார வுற்றமல ருறுவாகை பெற்றுவளர்
முதுமாம றைக்குருசிலே
முதலோன் அருட்கிருபை பெறுமாத வத்தினர்கள்
முறைநீதி யுற்றமுகிலே
தருவார வுற்றவர நிதியேயெ வர்க்குமொரு
தயவார மித்தபொருளே
தணியாத வெற்றிபெறு நவமேமி குத்தினிய
தனதாக முற்றகதிரே
அருகார வுற்றபல பிணியோர்க ளுக்குரிய
அருமாம ருத்துமலையே
அழியாத பொற்பதியி னரசார வுற்றநபி
யருளார வுற்றவடிவே
திருவாரு முத்துநக ருயர்வீதி சுற்றியொளிர்
சிறுதேரு ருட்டியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே! (82)

மந்தியிசை கண்டுகுயி லுங்கிளவி விண்டிடவு
மஞ்ஞைநட னங்கள்புரிய
மங்குல்தவழ் தண்டலையு ளங்கழிமி குந்துமது
ரந்தருப ழங்கள் சொரியும்
இந்துமணி சிந்துபுன லுங்கழனி சென்றிட
இளம்பயிர்வ ளம்பெருகிடும்
இன்பமொழி மங்கையரி டுங்குரவை ரம்பையரி
தெங்குளதி தென்றுவினவ
ஐந்தவரு ளங்களின்மி குந்திளைஞ ரம்பரின்
அகங்குளிர நின்றருளுவார்
அந்தரமு மண்டபகி ரண்டமும்வி ளங்குகதிர்
அங்குதயம் உண்டெழில் பெறும்
சிந்தின்வளர் வெண்டரள நம்பதிவி ளங்கவே
சிறுதேரு ருட்டியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே! (83)

சங்கமுறு வெண்டரள முந்திகழ்பி றங்கவே
சந்ததமு ழங்குதிரைசூழ்
தாரணியை வென்றனம தென்றுளம கிழ்ந்துமெய்
தடங்கலற வன்னிநெடிதாய்ப்
பொங்கெழில்பி றங்குதுவ சங்ககன வெண்புனல்
பொருந்திமினு டன்றுளிதரும்
பூமகள்ச வுந்தரவ லங்கிர்தமி குந்துவளர்
பொற்கிரண மாடமதிலே
மங்கையர்கள் தங்கமுகம் இந்திதென வின்றிட
மருண்டரவ மையமதுறும்
மாதவர்கிர் பாகரத போதனர்கள் சூழ்தரள
மாநகரின் வீதியிடையே
செங்கதிரொ டுந்துமிர தந்துகள் நிரம்பவே
சிறுதேரு ருட்டியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே! (84)

அருந்தவமு யன்றருள்பெரு ருந்தினர் உளங்களின்
அரும்பொருள தானவடிவே
ஆரணபு ராணகலை நீதிதவ றாமலே
அலங்கிர்த மிகுந்தகதிரே
வருந்தவுட லங்களொடு றைந்தபிணி கொண்டவர்
மருந்தெனவு கந்தமணியே
வாசமுறு செங்களப குங்குமம்வி ளங்கிவளர்
வாகையணி தங்குமுகிலே
முருந்துதர ளங்களினி சைந்தநகை மங்கையர்
முழங்குமண மும்பெருகுநீண்
முதறிவி னோர்கள்கிரு பாகரர்வி ளங்கிவளர்
முத்துநக ரத்தின்வழியே
திருந்துமறை வேதியரு ளங்களித தும்பவே
சிறுதேரு ருட்டியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே! (85)

பாரோர்து திக்கவளர் பேறேத வத்தினுறு
பாகேமி குத்தநவமே
பாவாண ருக்கினிய நாவேம கத்வமுறு
பாலேரு சித்தகனியே
காராரு மிக்கவிற சூல்நீதி பெற்றகலி
மாவீறு பெற்றவரசே
காலாகா லத்தினிலு மாறாத வெற்றிபெறு
காவேகலைக்க முதமே
தாரார வுற்றபுய தீராசெ யத்தினுறு
தானாப தித்தலைவனே
தாதாவெ னப்புகழு நீதாவெ வர்க்குமொரு
சாதார ணக்கருணையே
சீராறு முத்துநக ரேநீதி பெற்றிடச்
சிறுதேரு ருட்டியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே! (86)

கார்பெருகு மரகதக் கிரிகறுப் பாறினொடு
கனகம்வளர் வச்ரநாடு
காவலவர் புகழ்வகுதை நகர்குங்கு மத்தார்
கழங்கறுப சுங்கந்துகம்
பார்பெருகு மதசலம் இறைக்கும்வெள் ளானையும்
படருசிங் கக்கொடியுடன்
பம்மிவரு மும்முரசொ டாக்கினா சக்கிரம்
பலவிருது சூழவெழிலாய்த்
தார்பெருகு மாதவர்த போதனர்கிர் பாகரிக
சகலசம் பன்னரியல்பாய்ச்
சந்ததமும் வாழ்வுபெற வுந்தரள மாநகர்
தழைத்தெழில்பி றங்கிவரவே
சீர்பெருகு ராஜதமி குத்தமுகி லேயினிய
சிறுதேரு ருட்டியருளே
திறமைவள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே! (87)

அகதான வுற்றமுதல் அருள்நீதி பெற்றுவளர்
அமரோர்து திக்கும் வடிவாய்
அருமாம றைப்பொருளின் இறசூலி னுக்குரிய
அருளார வுற்றமணியே
ஜகமீதினுக்குரிய நவமேமி குத்துலவு
தருவேத வத்தின்வழியே
சறுகாத ருட்கிருபை பெறுமாத வத்தினர்கள்
தயவார வுற்றமுகிலே
இகலார்க ளுக்குமடல் அரியேறெ னப்புவியின்
இயல்பார மிக்கும்அரசே
இமையாது கஃகில்நிலை மனமேநி றுத்திவள
ரினிதாக முத்தமதியே
திகழாரு முத்துநக ருயர்வீதி சுற்றியொளிர்
சிறுதேரு ருட்டியருளே
திறமைவள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டிடருளே! (88)

தடமேபெ ருத்தமுகில் இனமீறி டக்குலவு
தளிர்சூழ்ம ருக்க மழுநீள்
தருமீதில் உற்றமது தினமேய ருத்துமகிழ்
தனதாகி டக்கரவதாய்க்
குடமார வுற்றமரை மடலேகி ழித்துநறை
குதிபாய விட்டகலவே
குறையாது றக்குமிழி தரவோடி டப்பருகு
குழுவார விட்டுநெடிதாம்
மடவாளை தத்திநதி விழவேசு டர்க்க ளுறு
மணிசேர வுற்றொளிருமா
வயல்மீ தடிததமுளை வழியேபு னற்பெருகும்
வளநாடு சத்தி நடுவார்
திடமான முத்துநக ருயர்வீதி சுற்றியொளிர்
சிறுதேரு ருட்டியருளே
திறமைவள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே (89)

மறைநாலி னுக்குமொரு பொருளாக வுற்றெவரும்
வழிகாண வைத்தமுதலா
மலர்மீதி னுற்றமரு வெனவேய னைத்தினிலு
மறைவாயு தித்தமயமாம்
கறையேது மற்றுவள ரிறசூலி னைத்தனது
ஹபிபாக மெய்த்தகனியாம்
கவல்வோர்த மக்கருவம் உருவேது மற்றினிய
கதியோர கத்துள் மதியாம்
இறையோன் அருட்கிருபை தனதாக வுற்றுவளர்
இதயாச னத்துவடிவே
இணையாக வுற்றவிரு பதமேது தித்துவரும்
எமையாள வுற்றவொலியே
சிறைமேவு முத்துநகர் உயர்வீதி சுற்றியொளிர்
சிறுதேரு ருட்டியருளே
திறமைவள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுதேரு ருட்டியருளே (90)

# சிறுபறைப் பருவம்

**ஆசிரிய விருத்தம்**

பைங்கட லெழுந்தலைவ ருந்சொனிய டங்கப்
பருப்பதவி னங்குலுங்கப்
பாரதிர வேநெடிய சேடன்முடி யாடவே
பருதிமதி யும்பதுங்க
மங்குலம ருண்டுதிசை யெங்கெங் கணும்படர
வானிடிக ளுந்தியங்க
வானவர ரம்பையரி தென்கொலென எண்ணியே
மனமுவந் ததிசயிக்கப்
பொங்கியொளி ருந்தார கைக்குலமு திர்ந்திடப்
போர்முரசு சத்தமவியப்
புன்சொலறி வாளர்கள் குறும்பகல வேகொடிய
பொய்க்குபிர் அருண்டுமலையச்
செங்களப முங்கிவளர் திண்புயம் இலங்கவே
சிறுபறைமு ழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொ யேயினிய
சிறுபறைமு ழக்கியருளே! (91)

அண்டர்குழு வணியணிய தாகவெதிர் காணவே
அரியமணி யாலமைத்த
அஞ்சுபத் தஞ்சுபடி யேணிவழி யாயிறைவன்
அறுஷிலே கபுசொடேறுங்
கொண்டல்குடை சூழவே நிழலுமடி மலஜலக்
குறிகாண்கி லாதவிறசூல்
கோகனத மலரடியு ளந்தனிலு வந்துவளர்
கோதிலா துறுமதியமே
தண்டலையின் முக்கனியு திர்க்குதென வேயுழவர்
சங்கினா லெறியமந்தி
தாவியிள நீரினா லெறிதர ளமாநகர்
தழைக்கவந் திடுஞ்செல்வமே
திண்டிறன்மி குந்தபுய முந்தொடையி லங்கவே
சிறுபறைமு ழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொவி யேயினிய
சிறுபறைமு ழக்கியருளே! (92)

பானுவல மாகுமதி னாமிசுறு றூமுமுயர்
பாரிசப ரங்குதிமிசும்
பப்பரம ராடமலை யாளமிந் துந்தில்லீ
பாண்டியஞ் சிந்துசயிலான்
சீனமுத லாய்வகு தாதறபி னோடுபல
தேசமெல் லாம்புகழவே
செய்யதிரு மாதுவள ருந்தரள மாநகர்
செழித்திடுஞ் செல்வமிகவே
ஈனனிபு லீசுளமி டைந்திடவ ருந்தியயல்
ஏகிமதி யுங்குலையவே
ஏதிலர்கள் அஞ் சித்தி டுக்கிடவு மேபரவை
யேநிகர்தல் கொண்டதிரவே
தீனிலை யேபெருகி மாதவம்வி ளங்கவே
சிறுபறைமு ழக்கியருளே
செல்வம் வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுபறைமு ழக்கியருளே ! (93)

அருமறைய கப்பொருளும் வெளிபடவு ரைத்துநிலை
யாகவொரு தீன்வழியிலே
ஆலமதெ லாம்வருக வேகிருபைசெய்து தன(து)
ஆகமகிழ் வானவிறசூல்
சரகுநெறி நற்றவமும் உறுதிபெற முத்திதரு
தற்பரம தானகுருவே
சாகரம தேநிகர்ப தாதிரத யானைபரி
தானைகொடு மீறியெதிரும்
மருவலர்தி டுக்கிடவு மலரடிது தித்தவர்கள்
மாசதற வோதுமணியே
மாதவர்த யாபரம னோகரகு ணாளவருள்
வாழ்வுதவு சோனை முகிலே
திருமரவ முற்றபுய வரையெழில்சி றக்கவே
சிறுபறைமு ழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுபறைமு ழக்கியருளே ! (94)

ஓதரிய வன்றனைய கத்திணிவி ருத்தியுமொ
ருப்படநி னைத்ததவமே
ஊறுபடவந்தபிணி யின்றுயர கன்றுவிட
வுந்தயவி ரங்குமமுதே
போதநல முங்குணமு றக்கருணை வைத்தருள்
பொருத்தியும்வி ளக்குமதியே
பூவுலக மும்புகழ் இலங்கிய சவுந்தர
புரந்தரது ரந்தரிகரே
ஆதரவு றும்பலன்மி குத்துவளர் முத்துநகர்
அற்புதம்வி ளக்குநிதியே
ஆவலுற வுந்தினம் இரண்டுசர ணம்பணியும்
அன்பினர்வி ரும்புமுகிலே
சீதளமு றும்பொறைநி கர்த்தபுய முத்தனே
சிறுபறை முழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுபறை முழக்கியருளே (95)

முரணுறும தத்தகரி திசைதிசை கலக்கமொடு
முகிலிடியெ னக்குமுறவே
முகடுதொடு மட்டகிரி நிலையசைய வுற்றிடவு
முறியலைக டற்சுவறவே
தரணிகளை னைத்தினையும் ஒருதலையி னிற்சுமை கொள்
தடவரவு டற்குழையவே
தடமுயரு பொற்குவடு வலைதரஉ டுக்கள்பல
துவறியுமி குத்துதிரவே
கிரணமுடி யுற்றசெய வரசர்கள்நெ ருக்கமுறு
கிருபையொடு மொய்த்துவரவே
கிடுகிடென வுற்றதொனி யதிர்தரமு ரட்டலைகை
கெறுவமதி கெட்டலையவே
தெருணலமி குத்துவளர் தரளநகருக் கிறைவ
சிறுபறை முழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுபறை முழக்கி யருளே! (96)

பின்னுமலை வாரிதியின் அகடுகீண் டெண்டிசை
பிறங்குமதி சிந்தும முதும்
பிரசமது முக்கனித் தேறலொடு மேதிகள்
பெருத்தமடி யொழுகு மமுதும்
பொன்னிதழ ரும்பின்முகை வண்டின மலர்த்தவே
பொங்கிவழி கின்றதேனும்
பூவையர்கள் ஆனனங் கண்டுமதில் இந்துமணி
பொழிதருந றுந்திவலையுங்
கன்னலின் மாலைவாய்ப் பட்டுடைதல் கொண்டே
கழன்றோடு கின்றசாறுங்
கலந்துமுளை யும்பயிரின் நம்பலப டர்ந்தே
களங்கற நிறைந்துபாயும்
செந்நெலங் கழனிசூழ் தரளநக ருக்கிறைவ
சிறுபறை முழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுபறை முழக்கியருளே ! (97)

மகரமுதிர் பொற்றொடையல் அரசர்கள் புகழ்க்குரிய
வணிகர்கள்மி குத்தகடையின்
வளநிரைய திற்குலவும் அறுசுவைக ளுக்கினிய
மதுரரச வர்க்க மெவையும்
பகரரிய மிக்கபல நிறமுயர்வி சித்ரகலை
பலபலச ரக்குவகையும்
பரிகரியொ டத்திரிகள் சிவிகைரத விற்கருவி
பலதவச முற்றதிரளும்
நிகரரிய முச்சுடரின் ஒளிதருக வுற்றநவ
நிதிமணிப ணித்தொகுதியும்
நிறையளவி சைத்தலிடும் ஒலியுலகு சுற்றிவளை
நிறைகடலி னுக்குயருறும்
நிகரநிரை யுற்றுவளர் தரளநகருக் கிறைவ
சிறுபறை முழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுபறை முழக்கியருளே ! (98)

இறையவன் அருட்கிருபை பெருகவுமு ஞற்றுதவம்
இயல்புநிலை பெற்றமதியே
எதிரடைய லர்க்களணி மகுடமுடி யற்றுவிழ
இடறியம தத்தகரியே
பறுபதநி கர்த்தபுய வரசர்கள் துதித்துவடி
பணிதரவு தித்தகதியே
பகலவனெ னப்புவிகள் எவையினும்வி ளக்கமுறு
பவுசுநெறி யுற்றநிதியே
வறுமைபட வுற்றபிணி யவர்துயர் அறுக்குமொரு
வடிவெனவி ருக்குமமுதே
மதிபகர வுற்றநபி மறைவழி தனக்குரிய
மதுரரச முற்றகனியே
சிறுமைகள் அகற்றியுயர் தரளநக ருக்கிறைவ
சிறுபறைமு ழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுபறைமு ழக்கியருளே! (99)

அலைவறுபு கழ்க்குரிய முதலவன் அருட்கிருபை
அகநிலைமை பெற்றமதியார்
அடிநிழல தத்துறுசின் முடிபரவ வெற்றிசெறி
அமரர்கள் துதிக்க நெடிதாஞ்
சலதரநி ழற்றுகுடை நபிமுகம்ம தற்குரிய
சறகினைவ ளர்க்குமணியே
தரளநகர் வர்த்தகர்கள் இனநிதி பெருக்கவொரு
தருவெனவு தித்தவடிவே
பலபலது யர்ப்பிணிகள் அறமுறைம ருத்துவகை
பரிவுடன் அளிக்குமரசே
படியுலகி னிற்கொடிய குபிரிருள் அறுக்குமொரு
பரிதியென வுற்றசுடரே
சிலைநுதல்க யற்கள்விழி அரமகளிர் மெய்க்கவொரு
சிறுபறைமு ழக்கியருளே
செல்வம்வள ருஞ்செய்கு தாவுதொலி யேயினிய
சிறுபறைமு ழக்கியருளே! (100)

ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

★

# பிள்ளைத்தமிழ் உறுப்புகளின் விளக்கக் குறிப்பு

**பிள்ளைத்தமிழ் :** பிள்ளைத்தமிழ் பாடுவதற்கு, "**குழவி மருங்கினும் கிழவதாகும்**" என்னும் தொல்காப்பிய நூற்பாவே அடிப்படை. குழந்தையைப் பலவாறாகப் பாராட்டிப் பாடுவது. இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படும். இந்நூல் செய்கு தாவூதுவலீ ஆண்டகை அவர்கள்மேற் பாடப் பெற்றதாகலின் ஆண்பாற் பிள்ளைத் தமிழாகும்.

**பாடல் வகை:** இப்பிள்ளைத் தமிழை ஆசிரிய விருத்தத்தாலும் கட்டளை ஒலி என்னும் சந்த விருத்தத்தாலும், கலி விருத்தத்தாலும் பாடவேண்டும் என்று **பன்னிரு பாட்டியல்** (நூற்பா110) கூறுகின்றது.

**பிரிவுகள்:** ஆண்பாற் பிள்ளைத்தமிழை காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பொருள்கள் அமையப் பாடுவர். பெண்பாற் பிள்ளைத்தமிழாயின் இறுதியிலுள்ள மூன்று பருவங்களுக்குப் பதிலாக கழங்கு, அம்மானை, ஊசல் ஆகிய பருவங்களைச் சேர்த்துக் கொள்வர்.

**காப்புப் பருவம்:** குழந்தையைக் காக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுவது. "உலகங்கள் யாவற்றையும் படைத்தவனே, ஒருபொருள் எனப் புலர் வணங்கிடுவதற்குரிய அரிதான பரனே! இறுதியும் முதலும் நடுவும் அற்றவனே! யாவற்றையும் அடைய வளைந்தவனே! நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவனே!வேதங்களின்இறுதியானவனே இணையோ உவமையோ இல்லாதவனே! வேதங்களின் உட்பொருளாய் இருப்பவனே! துக்கமோ மகிழ்வோ இல்லாதவனே! ஏக பரிபூரணனே!அருளாளனே! மேகம் தவழும் முத்து நகர் விளக்கம் பெறத் தோன்றிய செய்கு தாவூது ஒலி யாண்டகையைக் காப்பாயாக" என ஆசிரியர் வேண்டுகிறார்.

தம்முடைய வேண்டுதலுக்கு உறுதுணையாக "வேத நெறிவாழும்' மாதவத்தை உடையவர்களின் உள்ளத்தில்

வீற்றிருக்கும் 'மதியும்', இருளாகிய குபிர் நீங்கத் தோன்றிய 'சூரியனும்', இறைவன் அருளிய வேதத்தைப் பரப்ப வந்த தூதரும் ஆகிய நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆதரவையும்,

மாசுமருவற்ற மாநபி அவர்களின் இனிய மாதுலரும், மறைவழி போற்றிய தோழரும் ஆகிய ஹலரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பேரன்பையும்,

எதிரிகளை அஞ்சி நடுங்கச் செய்தவரும், மானும் புலியும் ஒரு தடத்தில் நீரருந்தும் செம்மையான ஆட்சியை நடத்தி வருமாகிய ஹலரத் உமறு (ரலி) அவர்களின் நிறையன்பையும்,

நபிகள் பெருமானாரின் இரு மகள்களை மண முடிக்கும் பேறு பெற்றவரும், இறைவனின் அரிய வேதத்தை ஒருங்கு தொகுத்து மக்களுக்கு வழங்கியவருமாகிய ஹலரத் உதுமான் (ரலி) அவர்களின் சீரன்பையும்.

சன்மார்க்க நெறி செழித்து வளர இளமைக்காலந் தொட்டுப் பணி புரிந்த பெருவீரர் ஹலரத் அலீ (ரலி) அவர்களின் நேரன்பையும்,

சூரியனும், சந்திரனும் போன்று இலங்கி என்றும் தீனிலைத் தீபமாக விளங்கிய ஹலரத் ஹஸன்,ஹுஸைன் (ரலி) அவர்களின் அருளன்பையும்.

செயிலானி நகரில் தோன்றித் திக்கெங்கும் தீன் கொடி நாட்டிய முகிய்யித்தின் அப்துல் காதிர் (ரலி) அவர்களின் திரளன்பையும் வேண்டி நிற்கின்றார் ஆசிரியர்.

**செங்கீரைப் பருவம் :** குழந்தைகளுக்குச் சொற்களைப் பழக்குவதற்கு முன் 'இங்கு' என்னும் ஓசையைச் செவ்வையாய் ஒலிக்கும்படித் தாயர் பழக்குவர். இஃது ஆறாம் மாதத்தில் நடக்கும் நிகழ்ச்சியாகும். கிளி மரக்கிளையில் ஒரு காலை ஊன்றி ஒருகாலைத் தூக்கி முன்னும் பின்னும் அசைந்தாடும். அது போலக் குழந்தையும் ஒரு காலை ஊன்றி எழுந்து இரண்டு கைகளையும் நிலத்தில் பதித்து நிமிர்ந்து ஆடுதலைச் செங்கீரையாடல்'' என்றும் கூறுவர் அறிஞர்

''ஜன்னத் என்னும் சொர்க்கப் பதிதுலங்கும் பசும் பிள்ளையே! திக்கெல்லாம் புகழவே மெய்க்கும் பசும் பிள்ளையே! திறமை வளரும் செய்கு தாவூது ஒலியே! குற்ற

மில்லாத சந்திரன் போன்ற முகம் அசையச் செங்கீரை ஆடி யருள்க" எனப்பாடுகிறார் ஆசிரியர்.

**தாலப் பருவம் :** தால் என்பது நாக்கு. குழந்தையைத் துயிலச் செய்யும் தாய்மார்கள் நாவை அசைத்து ஒருவகை ஒலியை எழுப்புவர்; தூளியில் கிடக்கும் குழந்தையைத் துயிலச் செய்வர். எட்டாந் திங்களில் நடக்கும் நிகழ்ச்சி இது.

மணமிகுந்த மலர்களின் இதழ்களாகிய ஏட்டை அவிழ்த்து வண்டுகள் வாசிக்கவும், அம்மலர்களிலிருந்து ஒழுகுந் தேனை உண்டு வாளை மீன்கள் துள்ளியாடவும், முத்து நகர்க் கடலினின்று எடுக்கப் பெற்ற முத்துக்கள் வானத்து மீன்களுக்கு இணைகாட்டி மின்னவும், நீர்நிலைகளில் வாழும் அன்னப் பறவைகள், மடி நிறைந்து சொரிந்த எருமைப் பாலினை உண்டு உறங்கவும், கிளிகளின் குதலைப் பேச்சைக் கேட்டுக் குரங்குகள் குட்டிகளை ஊஞ்சலி லாட்டவும் இத் தகைய மாட்சி நிறைந்த காட்சிகளையுடைய சாம்பநகருக்கு உடையவராகிய செய்கு தாவூது ஒலியைத் தாலாட்டுப் பாடித் துயில்விக்கின்றார் புலவர்.

**சப்பாணிப் பருவம் :** குழந்தைகள் இரண்டு கைகளைச் சேர்த்துக் கொட்டுதல் சப்பாணி எனப்படும். ஒன்பதாம் திங்களில் நடக்கும் நிகழ்ச்சி இது. இந்நிகழ்ச்சியைப் பாடும் பருவம் சப்பாணிப் பருவமாகும்.

"ஈடு இணையற்றவனாகிய இறைவனை விரும்பி மனம் உருகி விரியும் மலர் போன்ற உள்ளங்கைகளால் சப்பாணி கொட்டுக. முத்தமிழ் கற்ற புலவர்கள் முத்தி பெறவும், முன் கையில் அணிந்துள்ள சங்கிலி கொஞ்சிக் குதித்து முழங்கவும், மலர்க் கொத்துகளைப் போன்ற முத்துகள் பதிக்கப் பெற்ற அணிகளையுடைய கைகள் அசையச் சப்பாணி கொட்டுக" என வேண்டுகிறார் ஆசிரியர்.

**முத்தப் பருவம் ;** குழந்தையை முத்தம் தரும்படித் தாயர் வேண்டுவது இப்பருவம். இந்நிகழ்ச்சி பதினோராந் திங்களில் நடைபெறுவது.

"மடல் விரிந்த தாமரை மலர் போன்ற கைகளை நீட்டி இனிய வள்ளைப்பூப் போன்ற வாயால் அமுதமுண்டு குற்ற மற்ற வித்துகளைப் போல் முளைத்து வரும் பற்களைக்

கொண்ட மாணிக்கம் போன்ற எயிறு இலங்கவும் இனிய மறைமொழி கனிந்து ஒழுகும் பவள வாயால் முத்தம் தருக" என வேண்டுகிறார் ஆசிரியர்.

**வருகைப் பருவம் :** குழந்தை எழுந்து நடக்கத் தொடங்கும் பொழுது அதனை 'வா வா' என அழைப்பர் அன்னையர். இஃது குழந்தையின் பன்னிரண்டாம் மாதத்தில் நடக்கும் நிகழ்ச்சியாகும்.

இந்நூலாசிரியரும், "மேகந்தவழ்கின்ற சோலைகள் சூழ்ந்த முத்து நகருக்கு அதிபதியே, நீதி நெறி வளரவும், செங்கோல் சிறக்கவும், திறம் வளரவும் வருக" என அழைக்கின்றார்.

**அம்புலிப் பருவம் :** அம்புலியாகிய சந்திரனைக் குழந்தையோடு விளையாட அழைக்கும் பருவம். இது பதினெட்டாம் திங்களில் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

குழந்தைக்கும் அம்புலிக்கும் 1. ஒப்புக் கூறியும் 2. வேறுபடுத்திக் காட்டியும், 3. விளையாட வந்தால் அம்புலிக்கு ஏற்படும் நன்மை கூறியும், 4. வாராவிடில் அம்புலிக்கு வரும் தீமை கூறியும் அழைப்பது. சாம, பேத, தான, தண்டம் என்னும் நால்வகை உபாயங்களையும் கையாண்டு தாயர் அம்புலியை அழைப்பதாகப் பாடுவர் புலவர்.

"அம்புலியே! தேன் நிறைந்த சோலை சூழும் முத்து நகர் என்றும் வாழ்வுபெற வந்துதித்து, உலகெலாம் புகழ ஆளும் செய்கு தாவூது ஒலி ஆண்டகைமுன் ஆடவருக. மண்டலமெல்லாம் சுற்றி வருகின்ற நீ இவர்முன் வர ஏன் அஞ்சுகிறாய்? வாதுக்கு வந்த பூதப் பசாசுக் கூட்டங்களை அஞ்சியோடச் செய்ததை நீ கண்டனையோ? அவர் சண்டையிட வரும் பகைவர்க்குமுன் கர்ச்சனை செய்யும் சிங்கம்; தம் அடி பணிந்து நின்றவரைக் காத்து நிழல் தரும் கற்பக விருட்சம்; ஆய்ந்தறிந்த புலவர்களின் தலைவர்; பலகலைகளையும் கற்றவர். நீயும் ஒரு பதினாறு கலைகளைக் கொண்டிருக்கிறாய். இருப்பினும் என்ன? உனது உடலில் வளரும் களங்கம் ஒன்று உண்டே! அதை நீக்க மிக நீண்ட நாட்களாகவே ஓடித் திரிந்து அலைகிறாயே. சுகம் ஏதும் கிடைத்ததா? சுருங்கியும் குறைந்தும், பின் நிமிர்ந்தும் வளர்ந்தும் இப்படி மாறி மாறி வருவதைத் தவிர வேறு என்ன பயன் கண்டாய்? நீ அவரைக் காணச் செல். நபிகள் நாதர்முன்

முன்னர் தோன்றியதைக் கூறு. அவர் அழகிலேயே மயங்கி நின்று விடாதே. உனது களங்கத்தைக் கூறி முறையிடு. அதை நீக்க உதவி செய்வார். அரசர்களுக்கு ஏற்பட்ட நோய்களை நீக்கிய அவர் உனது நோயையும் நீக்குவார்'' என அம்புலியை நோக்கிக் கூறுகிறார் புலவர்.

**சிற்றில் பருவம் :** சிறுமியர் சிற்றில் இழைத்து விளை யாடுவர். சிறுவர் அவர்கள் கட்டும் சிற்றிலைச் சிதைத்துச் சீண்டி விளையாடுவர். குழந்தைகளின் மூன்றாம் வயதில் நடை பெறும் நிகழ்ச்சி இது. சிறுமியர் சிறுவரைப் பார்த்து, "எங்கள் சிற்றிலைச் சிதைக்க வேண்டா'' என்று வேண்டிக் கொள்வ தாகப் பாடுவர்.

"தஞ்சம் என்று வந்து அடைந்தவரைத் தாங்கி, அவர் களின் மனச் சஞ்சலத்தைப் போக்கித் தங்கியிருக்க மனையுந் தந்து, ஏற்பட்டுள்ள நோயையும் துன்பத்தையும் அகற்றி இனிய மொழி பேசி, இல்லாதவர்க்குப் பொருள் உதவி, நற்சுகத்தையும் அளித்து, இனிதாய் அவர்கள் தமது ஊருக்குச் செல்ல உத்தரவும் கொடுக்கின்ற, செஞ்சொல் அமுதம் என உதித்த செய்கு தாவூது ஒலியே, தங்களின் தாமரை மலர் போன்ற தாளால் சிறியவர்களாகிய எங்களின் சிற்றிலைச் சிதைக்க வேண்டா'' எனச் சிறுமியர் வேண்டுவதாகப் பாடு கின்றார் ஆசிரியர்.

**சிறுதேர்ப் பருவம் :** பாட்டுடைத் தலைவரைச் சிறுதேர் உருட்டி விளையாடும்படிக் கூறுவது இப்பருவமாகும். குழந்தைகளின் நான்காம் ஆண்டில் நடைபெறும் நிகழ்ச்சி இது.

மேகங்கள் சூழ்ந்த மரகதம் நிகர்த்த மலைகளும், கறுப்பாறு என்னும் கடலும் சூழ்ந்தது செல்வம் நிறைந்த வச்சிர நாடு. அதன் தலைநகரம் வகுதாபுரி. கறுப்பாற்றின் காவலர்கள் எனப் புகழப்பட்டவர்கள் குங்குமம் போன்ற சிவந்த நிறத்தை உடையவர்கள், அடலேறெனப்பாயும் குதிரைகளையும், வெள் ளானைகளையும், சிங்கக்கொடியையும், மும்முரசையும் உடை யவர்கள். விருதுகள் பல பெற்றவர்கள். தவத்திற்சிறந் தோரும் அருளுடையோரும் ஆகிய அவர்களும், பிறரும் சிறந்த வாழ்வைப் பெறத்தோன்றிய செய்கு தாவூது ஒலியே, சிறுதேர் உருட்டியருள்க'' எனப் பாடுகிறார் ஆசிரியர்.

வச்சிரம் என்பது புல். "புறக் காழனவே புல்லென மொழிப" என்பது தொல்காப்பியம். புறக்காழை உடைய பனையும் தென்னையும் புல்லினத்தைச் சேர்ந்தவை. இவை மிகுதியும் காணப்படும் இடங்கள் தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுர மாவட்டக் கடற்கரைப் பகுதிகள். எனவே இவை வச்சிர நாடு எனப்பட்டன. இந்த எல்லைப் பகுதிகள் பாண்டியரால் வகுத்தளிக்கப் பெற்றவை.

ஆசிரியர் கூறும் வரலாற்றுக் குறிப்புகள் கறுப்பாற்றின் காவலர்கள் எனப் பெயர் பெற்ற வள்ளல் சீதக்காதி அவர்களின் முன்னோரைச் சுட்டுகின்றன. இவர்கள் அதிராம் பட்டினத்திலும் முத்துப்பேட்டையிலும் வாழ்ந்து வந்தனர்.

**சிறுபறைப் பருவம்:** பாட்டுடைத் தலைவராகிய பிள்ளையைச் சிறுபறை அறைந்து விளையாடும்படிக் கூறுவது இப்பருவமாகும். குழந்தைகளின் இரண்டாம் ஆண்டில் நடைபெறும் நிகழ்ச்சி இது.

"மேகமே குடையாகி நின்று நிழலைத் தரும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தெய்வீகச் சட்ட நெறிகளைப் பரப்ப வந்த மாமணியே, முத்துநகர் வர்த்தகர்களின் நிதியைப் பெருக்க உதவிடும் கற்பகமே, பலவகைத் துயர்களையும் போக்கத் தோன்றிய மருத்துவரே, செல்வம் பெருகும் செய்கு தாவூது ஒலியே, இனிய ஓசையுடன் பறை முழக்கியருள்க" என வேண்டுகிறார் ஆசிரியர்.

பொதுவாகப் பிள்ளைத் தமிழ் நூல்களில் சிறுபறைப் பருவத்தை முன்னும் சிறுதேர்ப் பருவத்தைப் பின்னுமாக வைப்பது மரபு. ஆயின், நூலாசிரியர் நயினாமுஹம்மது பாவாப் புலவர் அவர்கள் சிறுதேர்ப் பருவத்தை முன்னும் சிறுபறைப் பருவத்தைப் பின்னுமாக அமைத்துள்ளார். 'உருட்டுக' என நூலை முடிக்கவிரும்பாது 'முழக்குக' என மங்கலச் சொல் கொண்டு நூலை முடித்திருப்பது அறிந்து மகிழ்தற்குரியது.

# அரபு—பாரசீகச் சொற்களின் பொருள்

அகது—ஒன்றானவன் (இறைவன்)
அசனுசைன்(ரலி)—நபிகள் பெருமானாரின் பேரர்கள்
அபூபக்கர்—(ரலி) நபிகள் பெருமானாரின் தோழர்
அறுசு—இறைவனின் ஆசனம்
அலீ(ரலி)—நபிகள் பெருமானாரின் மருமகனார்
ஆதம்(அலை)—முதல் மனிதர்
இபுலீசு—சாத்தான்
இரசூல்—இறைவனின் தூதர்
ஈமான்—நம்பிக்கை
உதுமான்(ரலி)—நபிகள் பெருமானின் தோழர்
உமறு(ரலி)— ,, ,,
ஒலி—வலீ—இறைநேசர்
க(ஹ)க்கன்—உண்மையானவன்—இறைவன்
க(ஹ)க்கானியம்—உண்மைத் தன்மை
கபுசு—செருப்பு
க(ஹ)பீபு—நண்பர்
கலிமா—இஸ்லாத்தின் மூலமந்திரம்
குறுசு—இறைவனின் சிம்மாசனம்
சரகு—இஸ்லாமிய தெய்வீகச் சட்டம்
சுகூது—இறைவன் தரிசனை
செயிலானி—ஓர் ஊர்
தாதா—தந்தை
திமிசு—திமிஸ்க்-சிரியா நாட்டின் தலைநகர்
பவுசு—வெற்றி
பீரோர்—பீர்—ஆன்மீகத் தலைவர்
ஃபுறுக்கான்—குர்ஆன் வேதம்
மஸலா—வினா
மக்கா—மக்கம்—இஸ்லாமியரின் புனிதத்தலம்
மதீனா—இஸ்லாமியரின் புனிதத் தலங்களில் ஒன்று
மலிக்—அரசர்
மஹ்மூது—நபிகள் நாயகத்தின் மற்றொரு பெயர்
மிசுறு—எகிப்து
முகிய்யித்தீன்—மார்க்கத்தை நிலைநிறுத்த வந்தவர்—ஓர் இறை நேசர்
வகுதாது—பகுதாது நகரம்
றூம்—ஒருநாடு
ஜின்—ஒரு வகைப் பூதகணம்
(ரலி) ரலியல்லாஹு அன்ஹு—இறைவன் அவர்களைப் பொருந்திக் கொண்டான்
(ஸல்) ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்—இறைவன் அவர்கள் மேல் அருள்மொழி பகர்வானாக

# அருஞ்சொற்பொருள்

அகடு-உள்ளே
அகமியம்-ஞானம்
அடர்தல்-பொருதல்
அண்டபகிரண்டம்-பிரபஞ்சம்
அத்தி-யானை
அரி-சிங்கம்
அரிணம்-மான்
அலகை-பேய்
அம்பர்-அவ்விடம்
அலங்கிர்தம்-அழகு
அறல்-கருமணல்
ஆக்கினை-தண்டனை
ஆகரம்-ஆகாரம்
ஆனகம்-துந்துபி
ஆரணம்-வேதம்
இந்திரகோபம்-ஒருபூச்சி
இந்து-சந்திரன்
இணக்கி-இணங்கச் செய்து
உம்பர்-வானவர்
உருமை-உப்பளம், இடி
உன்னி-நினைத்து
எகினம்-அன்னம்
ஐந்தார்-பனைமரம்
ஓகை-மகிழ்ச்சி
கஃகில் நிலைத்தல்-ஒன்றில் ஒன்றுதல்
ககன்-சூரியன்
கசடு-குற்றம்
கச்சளம்-இருள்
கடிகை-நாழிகை, கலம்
கதிர்-சூரியன்
கத்தன்-இறைவன்
கந்தம்-மணம்
களபம்-சந்தனம்
களங்கு-களங்கம்
கர்ச்சிதம்-இடி
கருதலர்-பகைவர்
கவுரி மடவார்-வானவப் பெண்கள்
கனகம்-பொன்
கன்னல்-கரும்பு
காலினம்-மிருகங்கள்
கிளவி-சொல்
கிருபாகரர்-இரக்கமுள்ளவர்
கொண்டல்-மேகம்
கொந்து-பூங்கொத்து
கோது-குற்றம்
கோளரி-ஆண் சிங்கம்
கோலும்-சூழும்
சக்கரவாளம்-ஒருமலை
சம்பன்னர்-நிறைவுள்ளவர்
சசி-சந்திரன்
சஞ்சரிகம்-வண்டு
சாம்பநகர்-முத்துப்பேட்டை
சித்து-அறிவு
சிந்தார்-சிதறாதவர்
சிற்பரம்-இறைமை
சின்பரி-குதிரை
சீவசரம்-உயிருள்ளவை
சுதை-சுண்ணாம்பு
சுடரோன்-சூரியன்
சுருதி-வேதம்
சுவறிட-வற்ற
சூதர்-சூது நிறைந்தவர்

சேடன்-பாம்பு
சேண்-தூரம்
சேரார்-பகைவர்
சேரலர்- ,,
சோரன்-திருடன்
தண்டலை-சோலை
தபோதனர்-முனிவர்
தரளம்-முத்து
தரங்கம்-கடல்
தவண்டை-பெரிய உடுக்கை
தற்பரன்-தலைவன்
தனியன்-இறைவன்
திரை-அலை
துடவை-பூஞ்சோலை
துந்துமி-ஓர் இசைக்கருவி
துரகம்-குதிரை
தேசு-அழகு
தேவு-ஒரு பூதகணம்
தேறல்-தேன்
தொடை-மாலை
தொந்தம்-உறவு
நந்தார்-வளராதவர்
நம்பர்-விருப்பமானவர்
நரலை-கடல்
நறவம்-தேன்
நிர்மலம்-பரிசுத்தம்
நேமி-சக்கரம்
பப்பரம்-ஒரு நாடு
பரங்கு-பிரான்சு
பிரதாபம்-மகிமை
பிரபலீகம்-பிரபலம்
பிரவை-ஒளி (கலை)
பிறங்கல்-மலை
பிறங்க-விளங்க
புடை-பக்கம்
புட்கரம்-தாமரைக்குளம்
புயங்கன்-பாம்பு
பூவை-மைனா (பறவை)
பூஷணம்-அணிகலன்
மங்குல்-வானம் மேகம்
மஞ்சு-மேகம்
மஞ்சரி-பூ மாலை:
மஞ்ஞை-மயில்
மட்டு-தேன்
மாதுலர்-மாமனார்
மரவம்-குங்குமம்
மருவலர்-பகைவர்
மனு-மனிதன்
மனோகரம்-அழகு
மூரல்-பல்
மூரி-வலிமை, பெருமை
முண்டகம்-தாமரை
மேதி-எருமை
வகுதாபுரி—ஓர் ஊர்; கிழக்கரை
வச்சிரம்-வைரம்; புல்
வச்சிரநாடு-கீழ்க்கடற்கரைப் பகுதி
வடவை-நெருப்பு
வத்தை-பெருமை
வரி-பாட்டு
வரிசிக்கும்-பெருமைப்படுத்தும்; விளைவிக்கும்
வருணன்-மழை
வர்த்தனர்-பெருக்கமுள்ளவர்
வள்ளை-ஒரு கொடிப்பூ
வாரணம்-யானை, கடல்
வாரிதி-கடல்
விண்டு-ஆகாயம்
வீரோர்-வீரர்
வெற்பு-மலை
ரஞ்சிதம்-இன்பம்
ரூபிகம்-தோற்றம்

அதிராம்பட்டினம்
அண்ணாவியார் குல திலகங்கள்
இயற்றிய
அரிய நூல்கள்

196382
(9204)

மதீனக் கலம்பகம்

மகுடி நாடகம்

ஃபிக்ஹு மாலை

மழைப் பாட்டு

செய்கு தாவூது வலீ ஆண்டகை
பிள்ளைத் தமிழ்

விடுகதைப் பாடல்கள், சீட்டுக்கவிதை

நாகூர்ப் புகை ரதவழிச் சிங்கார

ஒயிற் சிந்து

**சிங்கைப் பதிப்பகம்**
*23, கரீம் சுபேதார் தெரு,*
*ஐஸ் அவ்ஸ், சென்னை-600 014.*